908
குண்டூசி
ஆகஸ்ட்...
ஸ்ரீ சுகுமாரின்
மோகன
சுந்தரம்
ஜே. ஆர். ரங்கராஜுவின் துப்பறியும் நவீனம்
டைரக்ஷன்
எம். எஸ். பிக்சர்ஸ்
M.S. PICTURES
MADRAS

எதிர்பாருங்கள்!
அஞ்சலிதேவி
சூர்யபிரபா
கிரிஜா.....
நாகேஸ்வர ராவ்
ஸி.எஸ். ஆர்.
மற்றும் பலர் நடிக்கும்
விநோதாவின்
ஸ்திரீஸாகஸம்
ஆந்திரதேசம், ஸீடெட், சித்தூர்,
நைஸாம், வட இந்தியா தவிர
பூரண உரிமையாளர்
பெல் பிக்சர்ஸ் மதராஸ்
தமிழ்

ஜூபிடர் ரிலீஸ்

வருகிறது!
379
சிங்காரி
தமிழ்
லலிதா · பத்மினி · ராகினி · T.R.ராமச்சந்திரன்
S.V.சஹஸ்ரநாமம் · D.பாலசுப்பிரமணியம்
T.K.ராமச்சந்திரன் · V.K.ராமசாமி · C.வல்லிநாயகம்
துரைபாண்டியன் · ராதாகிருஷ்ணன் · M.S.S.பாக்கியம்
C.K.சரஸ்வதி · M.M.ராதாபாய்.......
MUHIL
நேஷனல் புரொடக்ஷன்ஸ்
தயாரிப்பு
குமாரவேல் பிக்சர்ஸ்
ரிலீஸ்
டைரக்ஷன் T.R.ரகுநாத்

இரவில் தனியாக இருக்கும்போது தான் பார்த்துக் கொள்ளவேண்டும்.

KOKSHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

284 படங்களுடன்

விளம்பரத்தினுல் சரிவரக் கூறமுடியாத விஷயங்கள் இதில்அடங்கியுள்ளன.

படிக்கிறவர்கள் நன்ருகவும் தெளிவாகவும் விஷயங்களைப் புரிந்து கொள்வார்கள். நல்வித 284 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம்தான் வெகு நன்ருயிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

விலை ரூ. 0—8—0.

BED ROOM PHOTOS

படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்கு படுக்கை அறைக் காட்சிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்துகொள்ள விருப்பமிருந்தால் இன்றே 50 படங்கள் கொண்ட ஒரு செஸட்டுக்கு ரூ. 1—4—0 அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள். 25 படங்கள் கொண்ட சாம்பிள் செஸட்டின் விலை அணு 0—12—0.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்திலேயே (இங்கிலீஷில்) இருக்கவேண்டும்.

PARIS ART HOUSE

Durgiana (Dep. 215) Amritsar.

ரூ. 1500 இனும்

நீங்கள்

விரும்புவதை அடையுங்கள்

இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம். இந்த மோதிரத்தை அணிந்துகொண்டவுடன் உங்கள் முயற்சிகள் எல்லாவற்றிலும் வெற்றி பெறுவீர்கள். எவ்வளவு கடின சித்தமுடைய ஆணையோ பெண்ணையோ இதன் மூலம் வசமாக்கலாம். மந்திர சக்தியால் அவர்கள் உங்களுக்குக் கட்டுப்பட்டு, உங்கள் மேல் அன்பு கொண்டு, அடிமை போல் உங்கள் காலடியில் கிடப்பார்கள். உங்களைப் பிரிய

நேர்ந்தாலோ துடித்துப் போவார்கள். வியாபாரம், குதிரைப் பந்தயம், விற்பனை வியாஜ்யம், பரீக்ஷை இவைகளில் இது உங்களுக்கு வெற்றியளிக்கும். மலடிகளுக்கு புத்திரப்பேறு ஏற்படும். இறந்தவர்களுடன் பேசலாம். உங்கள் மூதாதைகள் வைத்திருக்கக் கூடிய புதையல்கள் உங்கள் கனவில் உங்களுக்குத் தெரிய வரும். கெட்ட கிரகங்களின் கெடுதலை இது போக்கி, கொடிய வியாதிகளை இது குணமாக்குகிறது. சூரியன் மேற்கில் உதயமானாலும் ஆகலாம். ஆனால் இந்த மோதிரம் மட்டும் பயனற்றுப் போகாது. நூற்றுக்கு நூறு இது வெற்றியளிக்கும். விலை ரூ. 0—8—0. விசேஷ சக்தி வாய்ந்தது ரூ. 1—8—0. இதைப் பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1500 இனும். திருப்தி யில்லையேல் கிரயம் வாபஸ். உங்கள் தேவைக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு ஆங்கிலத்தில் எழுதுங்கள்.

BENGAL MAGIC HOUSE (D. 215)
SITLA TEMPLE, AMRITSAR.

134153

தமிழ் நாடெங்கும் சீக்கிரமே வெளிவருகிறது!

நடிகை

டைரக்ஷன்: T. ஜானகிராம்

குமாரி, ஓமனு, திக்குறிச்சி, சுகுமாரன் நாயர், சேதுராமன்,
அங்கமுத்து மற்றும் பலர் நடித்தது.

விவரங்களுக்கு :—கைலாஸ் பிக்சர்ஸ் லிமிடெட்., சேலம் ஜங்ஷன்.
(or) மல்லேஸ்வரி பிக்சர்ஸ், 18, ராஜரத்னம் தெரு, மதருஸ்—10.

வினியோகஸ்தர்கள் :—தஞ்சை, திருச்சி-ரத்னு பிலிம்ஸ், திருச்சி.
கோயமுத்தூர், சேலம்-காமதேனு பிலிம்ஸ், கோயமுத்தூர்.

தென் ஆற்காடு
வட ஆற்காடு
செங்கற்பட்டு
சென்னை நகரம்
} நியூ இந்தியா பிக்சர்ஸ், சென்னை.

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல. டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப்பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப்பின் துர்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் எனக்கு ஏற்பட்டு விட்டன. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொர்ப்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக்கொண்டே வந்தது. முகம் வெளுத்துவிட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டுவிட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒருநாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சைபோட வெளியில் வந்ததும், அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சுபோன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு, ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்துவிட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2-14-0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு]. தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையாலேயே மருந்து தயாரித்து, வி.பி.பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதவேண்டாம்.

BIBI CHARAN PIARI

SANT NAGAR (G.M.), JULLUNDUR CITY.

உயருங்கள்



2" முதல் 6" வரை உயரத்தை அதிகரிக்கச் செய்யலாம்.

உயர்ந்து வளர்ந்த ஆரோக்கியசாலிகள் வாழ்க்கையில் எத்துறையிலும் வெற்றி பெறுகிறார்கள்.

ஆனால் குள்ளமான, கட்டையான நபர்கள் கவனிக்கப்படாமல் தோல்வியுறுகின்றனர்.

உயரமானவர்களுக்கே கம்பீரமான தோற்றம் இருக்கிறது. அவர்களே உயர்ந்த பதவிகளுக்கும், உத்தியோகங்களுக்கும், விளையாட்டுகளுக்கும் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். அவர்களுக்கே அநுகூலமும், உத்தியோக உயர்வும் கிடைக்கிறது.

நீங்கள் குள்ளமாயிருந்தால் (ஜலந்தர் ஸிடி-அமெரிக்கன் டிரேடிங் கம்பெனியிலிருந்து மட்டுமே கிடைக்கக் கூடிய) "ஹைட்டோ" ஒரிஜினல் பதினறே நாட்களுக்குள் உங்கள் உயரத்தை அதிகரிக்கச் செய்யும். "ஹைட்டோ" முறை மிக சுலபமானது; தீமையற்றது. கஷ்டமான தேகப் பயிற்சி இல்லை. ஆயிரக்கணக்கானவர்களுக்கு "ஹைட்டோ" வெற்றி அளித்திருக்கிறது. எங்கள் புதிய அல்ட்ரா டிராப்பிகல் ஸ்மார்ட் பாக்கிங்குக்கு இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

பெட்டி ஒன்றுக்கு (ரெகுலர் சைஸ்) ரூ. 5-8-0

இரண்டு பெட்டிகள் (பூரா முறை) ரூ. 9-12-0

AMERICAN TRADING CO. (GM)

No. 6, Jullundur City.

பிரபல நடிகர் **T. R.** மகாலிங்கம் அவர்களின் மதிப்புரையுடன்

நட்சத்திரங்களும் நானும்

அ. கந்தநாதன்

கவர்ச்சிகரமான மூவர்ண அட்டையுடன், தமிழ்ப் பட உலகின் பிரபல நடிக, நடிகைகளின் வாழ்க்கையிலடங்கிய பல சுவைமிக்க அம்சங்கள் புத்தக உருவில் வெளிவருகிறது!

★ — கலை உலகில் ஜொலிக்கும் "மாணிக்கம்"

★ — சினிமா உலகின் "சிங்கார சுந்தரி"

★ — பட உலகில் மின்னும் "மோகன சுந்தரம்"

★ — திரைப்பட வானின் "உல்லாச வானம்பாடி"

★ — தமிழ்ப் பட உலகின் "எட்டிகான்டர்"

★ — வையகத்தை ஆட்டிவைக்கும் "அழகு ராணி"

இத்தனையும் நிறைந்தது.

விலை அணு எட்டேதான்!

எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை.

கமலா பப்ளிகேஷன்ஸ்

61, ஐயப்பச் செட்டி தெரு, சென்னை-1

உங்கள்
குடும்பங்களுக்கு வேண்டிய
அலுமினியம்
பர்த் ஸ்டேபிரைட்
பாத்திரங்களுக்கு



M.A. எத்திராஜுலு நாயுடு
7-A, ஈவினிங் பஜார் ரோடு
சென்னை.

குண்டூசி

ஆகஸ்ட், 1951

இந்த ஊசியில்

பிளாக் மார்க்கெட் (தலையங்கம்) ...	7
உள்ளது உள்ளபடி—"ஜடாயு" ...	8
டி. ஆர். ராஜகுமாரி (மூவர்ணப் படம்)	9
பாலச்சந்தர் (ஆர்ட் படம்) ...	10
பாலச்சந்தர் (வாழ்க்கை வர்ணனை)	11
குற்றவாளி (சிறு கதை) —"பால சுந்தரி" ...	15
நுனிப்புல்—"வெட்டுக்கிளி" ...	19
செய்திப் படங்கள்	23
குண்டூசியைக் கேளுங்கள் ...	27
நக்ஷத்திரம் பிறந்த நாள் ...	34
இது செய்தி	36
நடனம் ஆடினர் ("நந்தி") ...	41
செய்திப் படங்கள்	43
பொதுஜனம் பேசுகிறார் ...	47
இது நிஜமா!	56
நடன பத்மினி (ஆர்ட் படம்) ...	59
கிரிஜா (மூவர்ணப் படம்) ...	60
பிரம்மலோகம்	64
புஸ்தகப் பொழுது	66
குண்டூசி டைரி	68

வருஷ சந்தா:

இந்தியா, இலங்கை ... ... ரூ. 6
வெளிநாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி:

இந்தியா: 8 அணா. வெளிநாடு 12 அணா.
இலங்கை: 50 சதம்.

குறிப்பு:—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத்துணுக்குகள் முதலியவைகளில் வரும பெயர்கள் யாவும் கறபனைப பெயாகளே. அவை நிஜ நபர் யாரையும் குறிப்பிடுபவை அல்ல.

குண்டூசி

தென்னிந்தியா முழுவதிலும் நிகரற்ற
விநியோகமுள்ள மாத சினிமாப் பத்திரிகை

ஆசிரியர்-பி.ஆர்.எஸ்.கோபால்

பட்டை - 4
ஊசி - 11
பிரதி - 47
ஆகஸ்ட் 51

பிளாக் மார்க்கெட்

“இரண்டாவது மஹா யுத்தம் வந்தாலும் வந்தது. இந்த பிளாக் மார்க்கெட்டை தோற்றுவித்து விட்டது.” இதுபோல அநேகர் சொல்வதைக் கேட்டிருப்பீர்கள்.

ஆனால், ‘பிளாக் மார்க்கெட்’டின் பிதா இரண்டாவது உலக மஹா யுத்தம்தான் என்று கூறுவது தவறு. உண்மையில், அதன் உற்பத்தி ஸ்தானம் சினிமாத் தியேட்டர்கள்தாம் என்று நாம் கூறுகிறோம். நன்றாக ஞாபகப் படுத்திப் பாருங்கள். சினிமா டிக்கெட்டுகளை சில முரடர்கள் வாங்கி வைத்துக் கொண்டு அவைகளை அதிக விலைக்கு விற்கும் வழக்கம் சுமார் இருபத்தி ஐந்து வருஷங்களுக்கு மேலாகவே நடைமுறையில் இருந்து வருகிறதல்லவா?

இந்த மிகத் தீய வழக்கம் ஒழிக்கப் படாமல் கால் நூற்றாண்டுக்கு மேலாகவும் ஏன் விடப்பட்டிருக்கிறது என்று ரஸிகர்கள் கேட்கிறார்கள். இந்த நியாயமான கேள்வியை நாமும்தான் கேட்கிறோம்.

சினிமா — டிக்கெட் — பிளாக் மார்க்கெட்டை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று இந்தியாவிலுள்ள அத்தனை சினிமாப் பத்திரிகைகளும், இதர பத்திரிகைகளும் இடைவிடாமல் எழுதி வருகின்றன. மாகாண சர்க்கார்களும், போலீஸ் அதிகாரிகளும் சிற்சில சமயங்களில் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுள்ளனர். ஆனால், இந்த பிளாக் மார்க்கெட் என்னவோ இடைவிடாமல் நடந்து கொண்டுதானிருக்கிறது.

அப்படியானால் இத் தீமை சர்க்காரின் சக்திக்கும், சினிமாக்காரர்களின் முயற்சிக்கும் மீறிய விஷயமா என்றால், இல்லை. சர்க்கார் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அரை குறையானவையாக இருந்ததாலேயே தகுந்த பலன் ஏற்படவில்லை என்பது எம் துணிபு.

“டிக்கெட்டுகளை வாங்கி அதிக விலைக்கு விற்பது குற்றம்” என்று இந்திய சர்க்கார் முதலில் சட்டம் இயற்ற வேண்டும். இல்லையென்றால், தற்போதைய பிளாக் மார்க்கெட் ஒழிப்புச் சட்டத்தையே, ஏன் சினிமா-டிக்கெட்-பிளாக் மார்க்கெட்டை ஒழிக்கவும் உபயோகிக்கக் கூடாது!

சில சினிமாத் தியேட்டர்காரர்களே இந்த பிளாக் மார்க்கெட் ஆசாமிகளுக்கு உடந்தையாக இருந்து வருவதாக பல நேயர்கள் புகார் செய்துள்ளனர். வேலியே பயிரை மேய்ந்தால் விமோசனம் ஏது! நம் தியேட்டர்காரர்கள் இத்தகைய தீச் செயல்களில் ஈடுபட்டால் அது நம் சினிமாத் தொழிலுக்கு ஹானியை விளைவிப்பதோடு, பொது ஜனங்களின் நன் மதிப்பையும் இழப்பார்கள் என்று எச்சரிக்கிறோம். சர்க்காரும் அவர்களும் தீவிரமாய் ஒத்துழைத்து இந்த வழக்கத்திற்கு சீக்கிரமே ஒரு முடிவு ஏற்படுத்த வேண்டும்.

உள்ளது உள்ளபடி

ஜடாயு

தற்காலம் வந்து கொண்டிருக்கும் சினிமாப் படங்களில் ஒன்றிரண்டு கூட — ஆபாசக் காட்சிகள் சேர்க்கப் படாமல்—சுசிருசியானவையாக இல்லை என்று தாராளமாய் சொல்லிவிடலாம். ஆபாசக் காட்சிகளை எவ்வளவு முடியுமோ அவ்வளவு நிரப்பி லக்ஷக் கணக்கில் லாபம் சம்பாதிப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள் பட முதலாளிகள். பொதுஜன ஒழுக்கம் கெட்டுப் போவதைப் பற்றி அவர்களிடம் பேசுவதில் பயனில்லை. பொதுஜன ஒழுக்கத்தை பாதுகாப்பதற்கு நம் தேசிய சர்க்காராவது தணிக்கை போர்டு மூலம் முயற்சி எடுத்துக் கொள்ளும் என்று எதிர்பார்த்ததும் வீணாயிற்று. சில மாதங்களுக்கு முன் அகில இந்திய முறையில் மாற்றி அமைக்கப்பட்ட தணிக்கை போர்டாவது சீர்திருத்தம் செய்யும் என்று சிலர் எதிர்பார்த்தனர். அதுவும் ஏமாற்றமாகவே முடிந்திருக்கிறது. படங்கள் பழைய ரீதியிலேயே நிறைய ஆபாசக் காட்சிகளுடன் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

மானமில்லையா ?

பட முதலாளிகளுக்கு லாபம் கிடைத்தாலும் கிடைக்கா விட்டாலும், அவர்கள் நடிகைகளுக்கு ஏராளமாய் பணத்தை வாரிக் கொடுக்கிறார்கள். பணப் பைத்தியம் பிடித்த நடிகைகளோ எந்த அளவுக்கு வேண்டுமானாலும்— நிர்வாணமாகக் கூட !— நடிக்கத் துணிந்து விடுகிறார்கள். மான ஈனத்தைப்பற்றி அவர்கள் சிந்திப்பதேயில்லை. பெண் சமூகத்திற்கே அவமானம் தேடி வைப்பதாக இருக்கிறது அவர்களது செய்கை.

நடிகைகள் மானமற்ற முறையில் ஆபாசமாக உடையணிந்து கொண்டு நடிப்பதை பெண் சமூகம் அடியோடு வெறுப்பது மட்டுமன்றி, இதை ஒழிப்பதற்குக் கிளர்ச்சி செய்யவும் முற்பட்டு விட்டது. சென்ற மாதக் கடைசியில், மதுரையில் நடந்த மதுரை நகர் மாதர் காங்கிரஸ் மூன்றாவது ஆண்டு விழாவில், “விளம்பரங்களிலும், படங்களிலும் நடிகைகளை மோசமான முறையில் காட்டுவது பெண் சமூகத்தையே இழிவுபடுத்துவதாகும். சினிமாவில் நடிகைகள் ஆபாசமாக நடிப்பதையும், ஆபாசமான படம் தயாரிப்பதையும் தடுக்க சர்க்கார் சட்டம் இயற்ற வேண்டும்” என்ற ஒரு காரசாரமான தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பதை நம் பட முதலாளிகள் கவனிக்க வேண்டும். இனிக்கூட நம் பட முதலாளிகள் தங்கள் “காம விற்பனை”யைக் கைவிடா விட்டால், பட முதலாளிகளையும் சினிமாத் தொழிலையும் பொது மக்கள் நிரந்தரமாகவே வெறுக்கத் தொடங்கி விடுவார்கள் என்று எச்சரிக்கிறேன்.

காந்திஜி வாழ்க்கைப் படம்

உலக உத்தமர் காந்திஜியின் வாழ்க்கையை சினிமாப் படத்தில் காட்டுவதற்கு ஏற்பாடாகி வருவது சந்தோஷிக்கத் தக்க விஷயமே. அதோடு கூடவே ஒரு வருத்தமும் ஏற்படத்தான் செய்கிறது. இந்தப் படத்தை கேப்ரீயல் பாஸ்கல் என்ற அமெரிக்கர் தயாரிக்கப் போவது நமக்கு வெட்கக் கேடல்லவா! நம் பட முதலாளிகளோ அல்லது இந்திய சர்க்காரோ ஏன் இந்த முயற்சியில் ஈடுபடக் கூடாது? அதற்கான திறமை இவர்களுக்கு இல்லையா?

உலகம் பூராவிலும் காட்டக்கூடிய இப்படத்திற்கு ஏராளமான லாபம் கிடைக்கும் என்ற நோக்கத்துடனேயே அமெரிக்க முதலாளிகள் காந்திஜி விஷயத்தில் இவ்வளவு சிரத்தை காட்டுகிறார்கள். ஆனால், காந்திஜீயின் தத்துவங்களையும் வாழ்க்கை லக்ஷியங்களையும் ஒரு இந்தியனவ்வளவு ஒரு அந்நியனால் தெரிந்து கொள்ளவே முடியாது. ஆதலால். காந்திஜி படத்தை இந்தியப் பட முதலாளிகளோ, அல்லது இந்திய சர்க்காரோதான் தயாரிக்கவேண்டும்; அதை உலகம் பூராவிலும் காட்டவேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

டி. ஆர. ராஜகுமாரி

நாகூர் துரிதமாய் தயாரித்துவரும் "அமர கவி" படத்தில் டி. ஆர். ராஜகுமாரி பிரதம பாகத்தில் நடித்துவருகிறார்.





இது நிஜமா



இது நிஜமா

வாழ்க்கை வர்ணனை

இண்டுசி

பேசும் படங்கள் வரத் தொடங்கியதும் அவை ஒரு பெரும் பரபரப்பை உண்டு பண்ணின. சில வருஷங்களுக்குப் பிறகு சினிமாப் பத்திரிகைகளோ இதைவிடப் பெரிய பரபரப்பை சிருஷ்டித்து விட்டன. "'குடும்ப ஸ்திரீகள் சினிமாவில் நடிக்கலாமா! கூடாதா?" என்ற பிரச்னைதான் இந்தப் பரபரப்புக்கு முக்கிய காரணம். சிலர் "தாராளமாய் நடிக்கலாம்" என்றார்கள். "சிலர் கூடவே கூடாது" என்றார்கள். இரு கட்சியினரும் தங்களுக்குச் சாதகமான வாதங்களை எழுதியும், பேசியும் அலைமோதினர். சினிமா உலகில் ஊழியம் புரியும் நாய்க்குட்டி முதல் நக்ஷத்திரங்கள்வரை இந்த விஷயத்தில் அபிப்பிராயம் வெளியிடாதவர்களே கிடையாது. ஆனால் பிரச்னையென்னவோ தீர்ந்தபாடில்லை; யுத்தம்தான் பலத்தது.

இந்த வாத பிரதிவாதங்கள் பொதுஜனங்களிடையே கிளர்ச்சியை உண்டு பண்ணின. "சினிமாவில் நாமே நடித்துப் பார்த்து அது நல்லதா, கூடாதா என்பதை தெரிந்து கொண்டு விடலாமே" என்று சிலருக்குத் தோன்றியது. இந்த துணிகரமான எண்ணம் தோன்றப் பெற்றவர்களில் மைலாப்பூர் வக்கீல் வி. சுந்தரம் ஐயர் முதன்மையானவர். அவர் தம் இரு பையன்களையும் சினிமாவில் நடிக்க அநுமதித்தார். பையன்களை மட்டுமென்ன? தைரியமாக, தம் இரு பெண்களையும் கூட சினிமாவில் ஈடுபடச் செய்தார். அவர்களுக்குத் துணையாக இவரும் ஒரு சினிமா நடிகராக மாறினர். இவர்களைப் பின்பற்றி, மற்றும் சில குடும்பங்களும் பூராவாக சினிமாவில் ஈடுபடத் தொடங்கின. நல்ல வேளையாக, "குடும்பத்தினர் (பூராவாக) சினிமாவில் ஈடுபடலாமா!" என்ற புதுப் பிரச்னையை சினிமாப் பத்திரிகைகள் கிளப்பவில்லை!

சுந்தரம் ஐயர் குடும்பத்தினர் பூராவாகப் பங்கெடுத்துக் கொண்ட படம் பிரபாத் கம்பெனியார் வெளியிட்ட "சீதா கல்யாணம்" தமிழ்ப் படமாகும்.

பாலச்சந்தர்

ஸ்ரீ. ஐயர் இந்தப் படத்தில் ஜனகராக நடித்திருக்கிறார். அவரது மூத்த பையனை மாஸ்டர் ராஜம் ராமராகவும், மூத்த பெண் ஜயா சீதையாகவும், இளையபெண் சரஸா ஊர்மிளையாகவும் நடித்திருக்கின்றனர். அவரது இளைய பையன் பாலசந்திரனே ராவணன் தர்பாரில் தைரியமாய் கஞ்சிரா வாசித்திருப்பதைப் பார்த்திருப்பீர்கள். இந்தப் படம் பிரபாத்திற்கு நிறைய பணத்தையும் புகழையும் வாரிக் கொடுத்தது. மாஸ்டர் ராஜமும், ஜயாவும் பொது ஜனங்களால் புகழப்பட்ட நக்ஷத்திரம் ஆனார்கள். சரஸாவின் நடிப்பும் பாராட்டக்கூடியதாகவே இருந்தது. ஆனால் பாலசந்திரன் அதில் கஞ்சிரா வாசித்ததோடு சரி.

இந்தக் குடும்பத்தினர் அனைவருக்கும் எப்படி ஏக காலத்தில் சினிமாவில் நடிக்கும் பாக்கியம் கிட்டியது என்பதை நீங்கள் அறிய விரும்புவீர்கள். சென்னை சங்கீத கழகத்தினர் வருஷா வருஷம் சங்கீதப் போட்டிகளை நடத்தி வருகிறார்களல்லவா. 1931ம் வருஷம் நடந்த போட்டியில் மாஸ்டர் ராஜமும், தங்கை ஜயாவும் முதல் பரிசைப் பெற்றனர். இச் செய்தியை, நடிகர்கள் தேர்ந்தெடுப்பதற்காக சென்னைக்கு வந்திருந்த ஜெயந்திலாலும், 'சினிஸான்ஸ்' சேஷகிரியும் அறிந்ததும் இவர்களது வீடு தேடி வந்துவிட்டனர்.



மாஸ்டர் ராஜத்தை அவர்கள் ராமன் வேஷத்தில் நடிக்கச் செய்ய விரும்பினார்கள். ஆனால், தங்கள் நால்வருக்கும் கூடவே நடிப்பதற்கு இடமளித்தால்தான் ஒப்புக்கொள்ள முடியும் என்று தகப்பனார் சண்டிப்பாய் கூறிவிட்டார். இந்த நிபந்தனையையும் பிரபாத் கம்பெனியார் ஏற்றுக் கொண்டு, மாஸ்டர் ராஜத்தையும், மற்றவர்களையும் ஒப்பந்தம் செய்து கொண்டு, அப்படத்தில் நடிக்கச் செய்தனர்.

"சீதா கல்யாணம்" முடிந்தபின் சுந்தரம் ஐயர் மேலும் நடிப்பதை மறந்துவிட்டார். ஜெயாவுக்கு விவாகமாகி குடும்பத்தில் ஈடுபட்டார். மாஸ்டர் ராஜத்தின் நடிப்பு படத்தில் நன்கமைந்திருந்த போதிலும், யாது காரணத்தாலோ பட உலகில் அவருக்கு கிராக்கி ஏற்படவில்லை. சிறிது கால ஓய்விற்குப் பிறகே அவர் "ராதா கல்யாணம்" படத்தில் நடித்தார். பின்னர் அவர்

"ருக்மணி கல்யாணம்" படத்திலும் (எம். எஸ். விஜயாளுடன்) நடித்தார். ஆனல், இவ்விரு படங்களும் அவ்வளவாக வெற்றி பெறவில்லை.

இப்படியாக மூன்று "கல்யாணங்களில்" கதாநாயகனுய் நடித்து முடிப்பதற்குள்ளாகவே ராஜத்திற்கு இந்த சினிமா உலகின் பூரண "கல்யாண குணங்களும்" தெரிந்து போயிருக்கும். இதுகாரணமாகவோ, அல்லது அவருக்கே சினிமாவில் நடிப்பதற்கு இஷ்டமில்லை என்ற காரணத்தாலோ அவர் சினிமா உலகிலிருந்து விலகி, சங்கீதம், சித்திரம் ஆகிய கலைகளில் தம் பூரா கவனத்தையும் செலுத்தி வரலானர். இவருடைய சித்திரங்களில் சில "ஆனந்த விகடனி"ல் வெளி வந்திருப்பது கவனிக்கத் தக்கது. மாஸ்டர் ராஜம் தற்போது சென்னை அகில இந்திய ரேடியோவில் சங்கீத இலாகாவில் ஊழியம் செய்து வருகிறர்.

"சீதா கல்யாணம்" படத்தில் பங்கெடுத்துக் கொண்ட போது பாலச்சந்தருக்கு ஆறே வயதுதான். பையனின் திறமையை பிரபல டைரெக்டர் சாந்தாராம் மிக மெச்சி, அவனுக்கு இரு தபேலாக்களைப் பரிசாக அளித்தார். அந்த தபேலாக்களை வைத்துக்கொண்டு பாலச்சந்தர் பயிற்சி பெறத் தொடங்கினன்.

பாலச்சந்தர் எதையும் "முடியாது" என்று எண்ணும் வழக்கமற்றவர். அதனல் தான், அவர் கஞ்சிரா, பலதரப்பட்ட தபேலாக்கள் தவிர, புல்புல்தாரா, ஹார்மோனியம், சிதார், எஸ்ராஜ், தில்ருபா, பியானே, வீணை ஆகிய இத்தனை வாத்தியங்களையும் வாசிப்பதில் நல்ல பயிற்சி பெற்றிருக்கிறர். மற்றும் அவருக்கு சாரங்கி, பிடில், மிருதங்கம் ஆகியவைகளையும் ஓரளவு வாசிக்கத் தெரியும். வாய்ப் பாட்டுப் பாடவும் தெரியும். இதையெல்லாம் விட பெரிய ஆச்சரியம் என்ன வென்றல், இவ்வளவையும் குரு இல்லாமல் தாமே கற்றுக் கொண்டார் என்பதுதான்.

மாஸ்டர் ராஜம் மூன்று படங்களில் தோன்றிய பின் இந்தியா வெங்கும் பிரயாணம் செய்து சங்கீதக் கச்சேரிகள் செய்யப் புறப்பட்டார். அவருடன் தம்பியும் புறப்பட்டான். அவருடைய கச்





ஆராய்ச்சிமணி

சேரிகளில் தபேலா வாசிப்பதற்கென்று. அப்பொழுது பாலச்சந்தருக்கு வயது பதினொன்றேதான்.

வட இந்தியாவில், கராச்சி, லாகூர், முதலிய பல பிரதான நகரங்களிலும் தென்னிந்தியாவில் பல இடங்களிலும், இலங்கையில் முக்கிய நகரங்களிலும் இந்த சகோதரர்களின் கச்சேரி நடைபெற்றன. வட இந்தியாவிலும், தென்னாட்டிலும் இலங்கையிலும் பத்திரிகைகள் இவர்களது கச்சேரிகளைப் பாராட்டி இவர்களை "பிறவி மேதைகள்" என்று குறிப்பிட்டுள்ளன.

"பாலச்சந்திரன் ஒரு பிறவி மேதை" என்று பத்திரிகைகள் மட்டுமல்ல; ராஜாஜி அவர்கள் கூட பாராட்டியிருக்கிறார். ஆனால் அவர் குறிப்பிட்ட விஷயம் சங்கீதமல்ல; சதுரங்க (செஸ்) விளையாட்டு. ஆம்; பாலச்சந்தர் சதுரங்கம் ஆடுவதில் ஏழெட்டு வயதிலேயே நிபுணத்துவம் பெற்றுவிட்டார். அநுபவம் மிக்க சில சென்னை ஆட்டக்காரர்களுடன் ஆடி பரிசுகளும் பெற்றார். அந்த சந்தர்ப்பத்தில் தான் ராஜாஜி மேற்சொன்ன விதம் குறிப்பிட்டார்.

தம் சகோதரருடன் சங்கீதப் பிரயாணம் செய்த சமயங்களில் போகும் இடங்களிலெல்லாம் பாலச்சந்தர் சதுரங்கப் போட்டிகளிலும் கலந்துகொண்டு வந்தார். இந்தியாவிலேயே பஞ்சாபில் தான் "சதுரங்கப் புலிகள்" நிறைய உள்ளதாகக் கருதப்படுகிறது. ஒன்பது வயதே ஆன பாலச்சந்தர் தைரியமாக லாகூருக்குச் சென்று அங்குள்ள 'படே படே' சதுரங்க நிபுணர்களையெல்லாம் கலகலத்துப் போகும்படிச் செய்துவிட்டு வந்தார். அவர் இலங்கைக்குச் சென்றிருந்த போது,

[தொடர்ச்சி 60-ம் பக்கத்தில்]



பாலசந்தரும், பஞ்சாப் 'செஸ் சேம்பியன்' ஷெரிப் ஹுசேனும். (குல்லாய் அணிந்துகொண்டிருப்பவர்)

வட இந்தியாவில் பிரபலமாயுள்ள சிதார் வாத்தியம் கர்நாடக சங்கீதத்திற்கும் ஏற்றதே என்று பாலச்சந்தர் நிரூபித்து இருக்கிறார்.

குற்றவாளி

பாலசுந்தரி.......

சிறு கதை

மாஜிஸ்டிரேட் கண்ணன் முன்பாக அன்று நடக்கவிருந்த அந்த வழக்கு ஜனங்களிடையே மிகுந்த பரபரப்பை உண்டாக்கியிருந்தது. இருபது வயது யுவதி ஒருத்தி அந்த ஊர்ப் பிரமுகரான அண்ணாமலை என்பவரின் குழந்தையின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைத் திருடிவிட்டதாக வழக்கு. ஒரு பெண் கோர்ட்டில் வந்து நின்றாலே கூட்டம் குழுமிவிடும். அதிலும், அந்தப் பெண் அழகியாகவும் யுவதியாகவும் இருந்துவிட்டால் கூட்டம் சேருவதற்குக் கேட்பானேன்!

அண்ணாமலை அந்த ஊரிலேயே மிகவும் பிரபலமான மனிதர். அந்த நகரிலுள்ள சிறு குழந்தைக்கும்கூட அவரைத் தெரியும். ஊரிலுள்ள மற்ற பிரமுகர்களெல்லாம், ஓய்வு நேரங்களில் அவர் வீட்டில்தான் ரங்காட்டம் ஆடுவது வழக்கம். எங்கேயாவது நாட்டியக் கச்சேரி, சங்கீதக் கச்சேரி நடக்க வேண்டும் என்றால், அவற்றைப் பற்றிய ஏற்பாடுகள் யாவும் அவரிடம்தான் ஒப்புவிக்கப்படும். பொது மக்களுக்கு அவரிடம் ரொம்பவும் பிரியம். அவரும் நல்ல கலகலப்பான சுபாவம் உடையவர். அவருக்கு வயது முப்பத்தைந்து ஆகிறது. ஆனால், பார்ப்பதற்கு நான்கைந்து வயது குறைவாகவே மதிப்பிடத் தோன்றும்; அவருடைய தோற்றம் அப்படிப்பட்டது. ஊர்ப் பொறுப்பைத் தலையில் கட்டிக் கொள்வதில் அவருக்கு அலாதியான திருப்தி. சினிமா வானில் ஒரு புதிய நக்ஷத்திரம் முளைத்தால் அதற்கு மூல காரணம் அண்ணாமலைதான் என்று எளிதில் கூறிவிடலாம். இப்படி "கலை, கலை" என்று அலைந்து, அவர் மனது கலைந்துவிட்டதாகக்கூட ஒரு சிலர் தங்களுக்குள் "கோச மோச" வென்று பேசிக் கொள்வதுண்டு. ஆனால், அண்ணாமலைக்குத் தன்னைப் பற்றிப் பிறர் எப்படிப் பேசிக்கொண்டாலும் அதைப் பற்றிக் கொஞ்சமும் கவலையேயில்லை. அதையெல்லாம் பற்றிக் கவலைப்படுவதற்கு, அவருக்கு முதலாவது பொழுதேது? பொதுக் காரியங்களில் ஈடுபட்டு விடுவதால் வீட்டுப் பொறுப்பையெல்லாம், வேறு யாராவது அவருடைய உறவினர்கள் கவனித்துக் கொள்ள நேரிடும். அதுவும் தவிர, அவர் மிகச் சிறந்த சொற்பொழிவாளர்; எழுத்தாளரும்கூட. இப்படிப்பட்ட ஒருவருக்கு ஊரில் நல்ல செல்வாக்கு இருந்ததில் ஆச்சரியம் என்ன!

வழக்கு ஆரம்பமாயிற்று. குற்றவாளி யாருமற்றதோர் ஏழை. ஆகவே, அவள் பக்ஷம் வாதிக்க வக்கீல் யாரும் ஆஜராகவில்லை. பிரமுகர் அண்ணாமலையோ தம் குற்றச் சாட்டைத் தாமே எடுத்துக் கூறலானார்:—

"நான் குற்றவாளியைக் கடந்த ஒரு வருஷமாக அறிவேன். இவள் நிர்க்கதியாக இருப்பதை அறிந்து நான் இவளை என் வீட்டிற்கு அழைத்து வந்தேன். குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள சௌகரியமாயிருக்கும் என்று நினைத்து, இவளை என்னிடமே வைத்துக் கொண்டேன். பத்துப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு, ஒருநாள் இவள் மாயமாக மறைந்து விட்டாள். அடுத்த நாள் காலையில் என் குழந்தையின் கழுத்தில் போடப்பட்டிருந்த சங்கிலியும் மறைந்திருப்பது தெரிந்தது. உடனே நான் போலீஸுக்குத் தகவல் தெரிவித்தேன். பிறகு போலீஸ் ஸ்டேஷனில் ஐந்தாறு சங்கிலிகளில் என் குழந்தையினுடையதை அடையாளம் தெரிந்து சொன்னேன். இந்தச் சங்கிலி என் குழந்தையினுடையதுதான். கொஞ்ச

நாட்களுக்கு முன்தான் நான் இதைச் செய்தேன்."

அவருடைய குற்றச் சாட்டு முடிவுற்றவுடனே, எல்லோர் கண்களும் குற்றவாளியின் பக்கம் திரும்பின. மாஜிஸ்டிரேட் அந்த யுவதியின் பக்கம் திரும்பி, "அவரிடம் உனக்கு ஏதாவது கேட்க வேண்டியது உண்டா?" என்று கேட்டார். குற்றவாளியின் இதழ்களில் வெறுப்பின் மெல்லிய ரேகை தோன்றி மறைந்தது. "கேட்கவேண்டியதா? எனக்கு இவர் முகத்தைப் பார்க்கவே பிடிக்கவில்லை" என்று முதல் தடவையாக வாயைத் திறந்து பேசினாள். அவளுடைய கம்பீரமான இனிய குரலொலி, அந்த மண்டபத்தில் எதிரொலித்தது.

குற்றவாளியின் துணிகரமான பதிலைக் கேட்ட ஜனங்கள், அண்ணாமலையின் பக்கம் வியப்புடன் பார்த்தார்கள். அவருடைய வாயினின்றும் மெதுவான தெளிவற்ற சப்தமொன்று வெளிப்பட்டது. வழக்கின் சுவாரஸ்யம் அதிகரித்தது. கோர்ட்டில் குழுமியிருந்த மகா ஜனங்கள் காதுகளைத் தீட்டிக் கூர்மையாக்கிக் கொண்டனர்.

அண்ணாமலை கூறிய விவரத்தை இதர சர்க்கார் தரப்பு சாட்சிகள் ஊர்ஜிதப்படுத்தினர். சங்கிலி செய்த தட்டான், தான் அந்தச் சங்கிலியை கொஞ்ச நாட்களுக்கு முன்பு அவருடைய குழந்தைக்காகச் செய்து கொடுத்ததாகக் கூறினான். திருட்டைக் கண்டு பிடித்த போலீஸ்காரன், தான் குற்றவாளியைக் கண்டு பிடித்தவுடன் சங்கிலியைக் கேட்டதாகவும், குற்றவாளி அந்தச் சங்கிலியைத் தன்னுடைய தாயார் தனக்குக் கொடுத்



"அந்த லாக்கெட்டைத் திறந்து பார்த்த மாஜிஸ்டிரேட்டின் கண்கள் ஒரு முறை சாட்சிக் கூண்டில் நின்ற பெண் பாவையை நோக்கின. ....சிறிது நேரம் அவர் ஒன்றும் தோன்றாது திகைத்துப் போனார் ....பளிச்சென அவருக்கு பழைய கல்லூரி நாட்கள் ஞாபகத்திற்கு வந்தன,....."

நதாகக் கூறி சங்கிலியைத் தன்னிடம் கொடுத்து விட்டதாகவும் கூறி, 'இதனால் குற்றவாளி மிகுந்த தந்திரசாலி என்று தெரிகிறது' என்று தன் அபிப்பிராயத்தையும் கூறிமுடித்தான். சர்க்கார் தரப்பு சாட்சிகளை விசாரித்த பின்னர், மாஜிஸ்டிரேட் கண்ணன் குற்றவாளியின் பக்கம் திரும்பி தொடர்ச்சியாகக் கேள்விகள் கேட்கலானார்:

"உன் பெயர்!"

"கண்ணம்மா."

"உன் கணவனுக்கு என்ன உத்தியோகம்?"

"எனக்கு இன்னும் கல்யாணமே ஆகவில்லை"

"தகப்பனார் பெயர்!"

"நான் என் அப்பாவைப் பார்த்ததில்லை. அவருடைய பெயர்கூட எனக்குத் தெரியாது. நான் ரொம்பவும் சிறியவளாக இருந்தபோதே, அவர் இறந்து விட்டாரோ, அல்லது எங்கேயாவது ஓடிப் போய் விட்டாரோ, அதுவும் எனக்குத் தெரியாது. சில நாட்களுக்கு முன், என் தாயும் இறந்து விட்டாள்."

இவ்வாறு கூறும்போது, அவள் கன்னங்களின் வழியே இரு கண்ணீர் முத்துக்கள் உருண்டோடின. உணர்ச்சி வசமானவளாய் தன் இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு விம்மி, விம்மி அழலானாள் அந்த இளம் பெண். கோர்ட்டில் கூடியிருந்தவர்களின் உள்ளத்தில், குற்றவாளியின் மீது அளவு கடந்த அனுதாபம் சுரந்தது.

ஆனால், சர்க்கார் வக்கீல் கடுமையான குரலில், "இது கோர்ட். இந்த நாடகமெல்லாம் இங்கே வேண்டாம். கேட்ட கேள்விக்குப் பதில் சொல்" என்று ஓர் அதட்டல் போடவே, அவள் ஒருவாறு தன்னைத் திடப்படுத்திக் கொண்டு மாஜிஸ்டிரேட் பக்கம் பார்த்தாள். மாஜிஸ்டிரேட் விசாரணையைத் தொடர்ந்தார்:

"உன் தொழில் என்ன!"

"நான் நன்றாக சமையல் செய்வேன்."

"பிறகு!"

"மற்ற வேலைகளையும் நன்கு பார்த்துக் கொள்வேன்."

"இதற்கு முன் எங்கே இருந்தாய்!"

"எங்கே வேலைக்கு இடம் கிடைத்ததோ, அங்கே."

"அண்ணாமலை வீட்டில் என்னனென்ன வேலைகள் பார்த்தாய்!"

"சமையல் செய்வது, குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பது, அவருக்கு வரும் கடிதங்களைப் படித்துக் காண்பித்து அவைகளுக்கு பதிலெழுதுவது, முதலிய வேலைகள்."

"நீ எதுவரை படித்திருக்கிறாய்!"

"நான் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்திருக்கிறேன்."

கோர்ட்டில் குழுமியிருந்த ஜனங்களின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. மாஜிஸ்டிரேட் ஒரு நிமிஷம் திகைத்தார். பிறகு, குற்றவாளியை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தார். மூக்குக் கண்ணாடியைத் துடைத்துப் போட்டுக் கொண்டார். மீண்டும் விசாரணை ஆரம்பமாயிற்று:

"உனக்கு வேறு வேலையே கிடைக்கவில்லையா!"

[தொடர்ச்சி 50-ம் பக்கத்தில்]

சமீப காலத்தில், சினிமா உலகில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் குறிப்பிடத் தக்க ஒன்று, அந்த உலகப் பிரமுகர்களில் இருவர் 'இன்ஸால்வென்ஸி' கொடுத்திருப்பதாகும். இந்த விஷயம் பகிரங்கமாகவே "ஹிந்து" பத்திரிகையில் அறிவிக்கப்பட்டு விட்டது. அவர்களில் ஒருவர் 'ரினைஸான்ஸ்' சேஷகிரி என்ற ஜி. கே. சேஷகிரியாவார். மற்றொருவர், திருவல்லிக்கேணி பெல்ஸ் ரோடில் படக் கம்பெனி ஒன்றை ஆரம்பித்து நடத்திய குப்புசாமி என்பவர். ஜி. கே. சேஷகிரி, 'மஞ்சள் கடுதாசி கொடுத்த'தை அறிந்தபோது நான் ஆச்சரியமோ, வருத்தமோ அடையவில்லை. ஏனெனில், அவர் விஷயத்தில் இந்த முடிவு எதிர்பார்க்கப் பட்டதுதான். ஆதிநாளிலிருந்து அவர் போன போக்கு, 'அவருடைய கதி எதில் போய் முடியுமோ' என்று எண்ணும்படிதான் இருந்தது. மறுமலர்ச்சி என்ற பொருள்பட்ட 'ரினைஸான்ஸ்' தியேட்டர் என்ற கலா ஸ்தாபனத்தை ஆரம்பித்து, அதன்மூலம் கலை உலகில் புகுந்த இவர் கலை உலகில் எந்த மறுமலர்ச்சியையும் செய்துவிடவில்லை!

• • •

ஆனால். இதில் நான் வருத்தப்படவேண்டிய விஷயமும் ஒன்று இருக்கிறது! "ஜி. கே. சேஷகிரி 'இன்ஸால்வென்ஸி' கொடுத்துவிட்டார்" என்று மட்டும் அறிவிப்பு வெளியாகியிருந்தால் நான் கவலைப்பட்டிருக்கவே மாட்டேன். "ஜெமினி ஸ்டுடியோ சிருஷ்டி இலாகாவைச் சேர்ந்த ஜி. கே. சேஷகிரி" என்று ஜெமினியின் பெயரையும் இழுத்திருந்ததுதான் எனக்கு என்னவோ போலிருந்தது. "வெற்றி ஒன்றைத் தவிர வேறு எதையும் அறியாத ஜெமினியிலுள்ள ஒருவரா 'இன்ஸால்வென்ஸி' கொடுத்தார்!" என்றே எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

• • •

என்னைப் பொறுத்த மட்டில் நான் ஜி. கே. சேஷகிரியைப் பாராட்டவே செய்கிறேன். இன்று, நம் படத்துறையிலுள்ள பெரும்பான்மையோரது நிலைமை இவருடையதைப் போன்றதுதான். இன்னும் சொல்லப் போனால் அதையும்விட மோசமானதாகவே இருக்கிறது. அவர்கள் எல்லாம் தங்கள் அவல நிலையை மூடி மூடி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்க இவர் தம் நிலையை அப்பட்டமாக வெளியிட்டுக் கொண்டது பாராட்டப்பட வேண்டிய விஷயம் தானே! அதற்கு தனித் துணிச்சல் இருந்தால்தானே முடியும்! இனி நம்மிடையே 'இன்ஸால்வென்ஸி' கொடுக்கும் நிலையிலேயும், கடன்காரர்கள் தொல்லையில் சிக்கி அவதிப்படும் சங்கடத்திலேயுமுள்ள

கோவார்டினேட்டட் ஸினி புரொடக்ஷன்ஸாரின் "சுகிர்த" (மலையாளம்) "நண்பன்" (தமிழ்) ஆகிய இரு படங்களில் நடித்துவரும் புதுமுகங்கள்—பாவு, ஜோஸ்.



சென்ற மாதம் வெளிவந்திருக்கும் ''மோஹனசுந்தரம்'' தமிழ்ப் படத்தில் டி. ஆர். மஹாலிங்கம் ''குல்லாய் போடும் காட்சி இது''. அவருக்கேற்றாற் போல் நடிக்கிறார் பாருங்கள் காமெடியன் கே. சாரங்கபாணி.

ஒன்றிரண்டு பேர்வழிகளை மட்டும் குறிப்பிடுகிறேன்.

• • •

தமிழ் நாட்டின் (மாஜி) தலை சிறந்த டைரெக்டர் ஒருவர். அவர் ஒரு பட முதலாளியுங்கூடத்தான். அவரால் சிருஷ்டிக்கப்பட்ட நக்ஷத்திரங்கள் பலர் இன்று கை நிறைய சம்பாதித்துக்கொண்டு சுகமாக இருக்கிறார்கள். ஆனால் இவருடைய நிலையோ படுமோசம். நாலா பக்கங்களிலும் கடன் தொல்லை அவருக்கு. வீட்டை விட்டு வெளியே தலை காட்ட முடியாத சங்கடம். கடன்காரர்களின் பிடுங்கலிலிருந்து தப்ப அவர் பல தந்திரங்களைக் கையாண்டு வருகிறார். அவர், தம் பங்களாவை விட்டு காலை ஏழு மணிக்கு முன்னால் கிளம்பிப் போனால் இரவு எட்டு மணிக்குப் பிறகுதான் திரும்புவார். இந்த இடைக்காலத்தில் அவர் எங்கிருப்பார் என்று யாராலும் சொல்ல முடியாது 'ஓர் இடந்தனிலே நிலை நில்லாமல்' சுற்றிக் கொண்டிருப்பார். அவருக்கு அந்தரங்கமானவர்களுக்கு மட்டுமே அவரை நிச்சயம் எங்கே சந்திக்கலாம் என்பது தெரியும். நடிகையான—அவருடைய மற்றொரு மனைவியின் வீடுதான் அந்த 'அபயஸ்தலம்' தப்பித் தவறி அவர் பங்களாவில் இருக்கும் சமயம் கடன்காரர்கள் யாராவது வந்துவிட்டாலோ, உள்ளே இருந்துகொண்டே ''இல்லை'' என்று சொல்லி அனுப்பிவிடுவார்கள். அதற்கு வேண்டிய அடியார்கள் நிறைய அவரிடம் இருக்கிறார்கள்.

* * *

கடன்காரர்களால் அவருடைய பங்களா இதுவரை பல முறைகள் ஏலத்துக்குக் கொண்டு வரப்பட்டு விட்டது. அவரும் எப்படியோ அதை ஏலத்தில் விட்டுவிடாமல் சமாளித்துக் கொண்டுதான் வருகிறார். ஒரு சமயம், திடீரென்று ஒரு கடன்காரன் பங்களாவைப் பூட்டி 'ஸீல்' வைக்க கோர்ட் உத்தரவுடன் வந்து விட்டான். சட்டென்று அவரால் எந்த ஏற்பாடும் செய்ய முடியாமல் போகவே, உத்தரவக்

குக் கீழ்ப்படிய வேண்டியதாகிவிட்டது அவர். இந்த டைரெக்டரிடம் இருதய பூர்வமான விசுவாசமுள்ள ஊழியன் ஒருவன் இன்றும் இருக்கிறான். டைரெக்டர் ஒரு ஏற்பாடு செய்து பங்களாவைத் திரும்பத் திறக்கும்வரை அதிலுள்ள சாமான்களுக்குப் பாதுகாவலாக அந்த ஊழியன், பூட்டி ஸீல் செய்யப்பட்ட பங்களாவுக்குள்ளேயே இரண்டு நாட்கள் அடைபட்டுக் கிடந்த விந்தை யாருக்குத் தெரியும்!

* * *

கடன்காரர்களுக்கு நாமம் சாத்த வேண்டும் என்ற நோக்கம் அவருக்கு லவலேசமும் கிடையாது. ஆனாலும், தனக்கு விடிவு காலம் ஏற்படும் வரையில் அவர் தம் கடன்காரர்களின் தொல்லைகளிலிருந்து தப்ப நினைப்பது சகஜம்தானே. இவர் சில மாதங்களுக்கு முன்பு, ஒரு புதுப் படத்தை ஆரம்பித்தார். அது அவருடைய சொந்தப் படம்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். இருந்தும் அவர் அப்படத்தை தம்முடைய நண்பர் ஒருவர் கம்பெனியின் பெயரில்தான் ஆரம்பித்தார். அது மட்டுமா? அவர் இப்பொழுது ஒன்றுக்கு மேற்பட்ட படங்களை டைரெக்ட் செய்து வருகிறார். இருந்தும் அந்த விஷயம் ரகசியமாகவே இருக்கவேண்டுமென அவர் விருப்புகிறார். அந்தப் படங்களின் விளம்பரங்கள்கூட டைரெக்டரின் பெயர் இல்லாமல்தான் வெளிவருகின்றன. "விளம்பரம் விரும்பாத டைரெக்டரும் உண்டா!" என்று ஆச்சரியப்படுகிறீர்களோ? அதுதான் கால வித்தியாசம்!

• • •

அவர் கடன் பட்டுள்ளவர்களின் ஜாப்தாவில் பத்திரிகை ஆபீஸ்கள் பலவும் இடம் பெற்றிருக்கின்றன. அவர் கொடுத்த பட விளம்பரங்களுக்கான பாக்கியைத்தான் குறிப்பிடுகிறேன். அவர் நல்ல செல்வாக்காக இருந்து நொடித்து போயிருப்பவர் என்பது பத்திரிகைக்காரர்களுக்குத் தெரியும். ஆகவே, "சீக்கிரமே எனக்கு நல்ல காலம் வருகிறது. உங்கள் கடனுக்கெல்லாம் வழி செய்கிறேன்" என்று டைரெக்டர் கூறும் சமாதானத்தை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். ஒரு சினிமாப் பத்திரிகையின் முதலாளி தமக்குச் சேர வேண்டிய பாக்கியில் ஒரு பகுதிக்காக டைரெக்டர் வீட்டிலிருந்த வட்டமேஜை

ஏஜண்டுகள் தேவை

"பூஞ்சோலை"

கௌரவ ஆசிரியர்:

அழ. வள்ளியப்பா

சிறுவர் சிறுமியர்களுக்கான
மாதப் பத்திரிகை

✶

- கருத்துள்ள கதைகள்
- கண்ணைக் கவரும் படங்கள்
- அற்புதமான விஷயங்கள்
- அழகான முகப்பு

✶

ஐந்தாவது இதழ்
தயாராகிறது

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு டிபாசிட் கட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை.

விண்ணப்பிக்கவும்:

"பூஞ்சோலை"

தபால் பெட்டி எண் 1803
135, பவழக்காரத் தெரு,
சென்னை—1.

யைத் தம் ஆபீஸுக்கு மாற்றிக்கொண்டு விட்டதை இங்கு கூறாமலிருக்க முடியவில்லை!

* * *

மிகவும் நெருக்கடியான ஒரு சந்தர்ப்பத்தில் அவர்—தம் படங்களுக்கு உபயோகித்து வந்த—தம்மிடமிருந்த ஆடையாபரணாதிகளை விற்று விடும்படியாகிவிட்டது. அவைகளுடன் அவர் தம்மிடமிருந்த ஒரு பிரம்மாண்டமான புத்தர் பொம்மையையும் கொடுக்க வேண்டியதாகி விட்டது. அப்போது அவருடைய கண்கள் மட்டுமென்ன, அவருடைய குடும்பத்தினருடைய கண்களும், அவரிடம் வேலையில் இருந்த ஒவ்வொரு நிர்வாகியின் கண்களும் கலங்கி விட்டன. இந்தப் பிரமுகர் ஒரு பரோபகாரி. அவர் கை காட்டி விட்டு இன்று பலர் சுக ஜீவிகளாக இருக்கிறார்கள். அவர்களில் ஒருவராவது இவர் பழைய படி செல்வாக்குடன் சுபீக்ஷமாக இருக்க வழி செய்ய அக்கறை எடுத்துக் கொள்ளாதது வருந்தத் தக்க விஷயமே!

* * *

கடன்காரர்கள் தொல்லையில் சிக்கி அவஸ்தைப் பட்ட மற்றொருவர், 'கலியுகக் கிருஷ்ணன்' என்று புகழப்பட்ட ஒரு நடிகராவர். பட உலகில் அவருக்கு நல்ல கிராக்கி இருந்த சமயத்தில் தம் சொந்தத்தில் ஒரு படக் கம்பெனியையும் ஸ்டுடியோவையும் அவர் ஆரம்பித்தார். ஒரு கருமியின் கதையைப் படமாகத் தயாரித்தார். அப்படத்தின் வசூலும் கருமித்தனமாகவே போய்விட்டது. மேலும் இரண்டு புராணப் படங்களைத் தயாரித்தார். அவைகளும் அவரை வசூல் விஷயத்தில் மோசம் செய்துவிட்டன. பாண்டவ அக்ஞாத வாசத்தை அடிப்படையாகக் கொண்ட கதையைத் தயாரித்ததின் பலனோ என்னவோ, அவர் பெரும் கடனாளியாகி தலை மறைவாகிவிட்டார். சில மாத அக்ஞாத வாசத்திற்குப் பின் அவர் பிரபல ஸ்டுடியோ ஒன்றின் புராணப் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டார். விஷயம் தெரிந்த கடன்காரர்கள் சும்மா விடுவார்களா! அவரை விரட்டி விரட்டி அடித்தார்கள். ஷூட்டிங் நடக்கும் ஸ்டுடியோவுக்குள்ளேயே 'அரெஸ்ட் வாரண்டு' டன் வந்து

[தொடர்ச்சி 67-ம் பக்கத்தில்]

'என்னைக் கண்டு மயங்காத பேர்கள் உண்டோ' என்று வேல் விழி மூலம் வெளியிடுகிறார் போலும் மாதுரி தேவி—"ராஜாம்பாள்" படத்தில்.

"ஓர் இரவு", "பிச்சைக்காரி" ஆகிய படங்களில் திறம்பட நடித்திருக்கும் பி. எஸ். சரோஜாவுக்கு "அமர கவி"யில் பாகவதருடன் நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

வெண்கலத்வனி எம். கே. டி. பாகவதர் "ஹரிதாஸ்" அவ்வளவு "அமர கவி"யிலும் புகழ் பெறவேண்டும் என்று முயன்று வருகிருர். "அமர கவி"யில் அவரது தோற்றம் இது



யுவா பிக்சர்ஸார் தயாரித்து வரும் "வீணுவதி" என்ற தமிழ்ப் படத்தில் எஸ். வரலக்ஷ்மி துணிப் பஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டிருப்பது தெரிகிறதா?

சினிமா சம்பந்தமாக உங்களுக்கு என்ன சந்தேகமிருந்தாலும் "குண்டூசி"யிடம் கேளுங்கள். இலவசமாகவே பதில் பெறலாம். யாருடைய மனமும் புண் படாதபடி தமாஷாக பதிலளித்து, தமிழ் சினிமா உலகைச் சீர்திருத்துவதே இப் பகுதியின் நோக்கமாகும். —ஆசிரியர்

ஏ. எஸ். அகஸ்டின் (கொழும்பு)

"மச்சரேகை" ஜனங்களிடையே வெற்றி பெறாதது எதனால்?

"மச்சரேகை"க்கு முன் சென்ற ஒரு வருஷ காலமாய் ஜனங்களின் கவனமெல்லாம் (கொரியா) 38-வது அட்ச ரேகை மீது லயித்திருந்தது காரணமாயிருக்கலாம்!

சு. ரத்தினசாமி (ஆடுதுரை)

என். எஸ். கிருஷ்ணன் இதுவரையில் நடித்துள்ள படங்களிலெல்லாம் ஹாஸ்ய பாகம் சம்பந்தப்பட்ட வரையில் அவருடைய டைரெக்ஷனே தானமே?

உம் கேள்விக்கு முன்னால் 'சிலவருஷங்களாக' என்று முதலில் சேர்த்துப் படித்தால் பதில் தெரிந்துவிடும்.

ஏ. லத்தீப் (இலங்கை)

வைஜயந்திமாலாவை படத்தில் பார்த்துவிட்டே இப்படித் தவிக்கிறீர்களே. நேரில் (உயிருடன்) அவரைப் பார்த்துவிட்டால் இவர்கள் என்ன செய்வார்கள்?

ஏன்; ஒரேயடியாய் உயிரை விட்டுவிடுவார்கள்!

எம். சுகுமார் (மீரட்)

நான் "குண்டூசி"யை இடைவிடாமல் படித்து வருகிறேன். இதற்காக என் நண்பர்கள் என்னைக் கேலி செய்கிறார்களே? ஏன்?

காரணம், அவர்களுக்குப் படிப்பதற்கு நீர் "குண்டூசி"யை இரவல் கொடுக்க மறுக்கிறீர் போலிருக்கிறது!

ஜி. எஸ். (புஸ்ஸல்லாவ, இலங்கை)

எது சிறந்தது? காதல் கொண்டபின் கல்யாணமா? கல்யாணத்திற்குப் பின் காதலா?

காதல், கல்யாணத்தில் முடியும்; கல்யாணமோ கஷ்டத்தில் முடியும். எதுவானாலும், சுகம் சொற்ப காலத்திற்குத்தான்!

ந. மு. ராமன் (திருவல்லிக்கேணி)

படத்தில் லலிதா-பத்மினியோ, குமாரி கமலாவோ, வைஜயந்திமாலாவோ, அல்லது வேறு யாரோ ஒருவரோ நடனம் ஆடினால் தான் படம் ஓடும் என்று நினைக்கிறார்களே நம் படமுதலாளிகள். "சம்சாரம்" படத்தைப் பற்றி இவர்கள் அபிப்பிராயம் என்ன?

நடனம் இருந்தால் தான் படம் ஓடும் என்று எண்ணுவது தவறாகும். உண்மையில் தற்போது ரஸிகர்கள, படங்களில் நடனம் அனாவசியமாகவும், அளவுக்கு மீறியும் புகுத்தப்படுவதை வெறுக்கிறார்கள்.

ஏ. கே. ரஸாக் (அலங்கியம்)

சீரணூரில் எஸ். கே. மொஹிதீனின் கட்டிடத் திறப்பு விழாவின் போது ஜீவரத்தினம் பாட்டுக் கச்

"ஹரிதாஸ்" படததில் மிகப் புகழ் பெற்ற "ஜாடியான—எம். கே. டி. பாகவத நம டி. ஆர். ராஜகுமாரியும் மீண்டும் டைரெக்டர் நாகூர் தயாரித்துவரும் "அமரகவி"யில் நடிக்கின்றனர்.

சேரியும், குமாரி கமலா நடனமும் செய்தார்களே, அது இலவசமாகவா அல்லது பணம் வாங்கிக் கொண்டா?

அது எப்படியானலும், கேட்டவர்கள் பார்த்தவர்கள் அதற்குப் பணம் கொடுத்திருக்க மாட்டார்கள் என்று நான் நிச்சயமாகக் கூற முடியும்!

பி. ஆர். ராமச்சந்திரன் (வரதராஜபுரம்)

என். எஸ். கிருஷ்ணனுக்கு எத்தனை குழந்தைகள் இருக்கின்றன?

நான் ஆரம்பத்தில் இந்தக் கணக்கைக் கச்சிதமாய் கவனித்து வந்தேன். பிறகு குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்த வேகத்துடன் என் திறமை போட்டி போட முடியாது தோல்வியுற்று விட்டது!

டி. பிரேம்குமார் (கும்பகோணம்)

பி. யு. சின்னப்பா, பி. பி. ரங்காச்சாரி இவர்கள் கால் பந்து விளையாடவும், மஹாலிங்கம், கோவிந்தன் இவர்கள் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்ளவும், ராதாவும் ரஞ்சனும் கிரிக்கெட் ஆடவும் ஏற்பாடு செய்தால் நல்ல வசூல் ஏற்படுமல்லவா?

அப்படி வசூலாகும் ஏராளமான தொகையை "இவ்வருஷத்திய சிறந்த கனவைக் கண்டுள்ள உமக்கு அளித்து விடலாம் என்று நினைக்கிறேன்.

அழகர் சாமி (புது டில்லி)

விமானப் படையைச் சேர்ந்த என் அண்ணு லலிதாவையும், தளபதி படையைச் சேர்ந்த நான் பத்மினியையும் கப்பற் படையைச் சேர்ந்த என் தம்பி ராகினியையும் மணம் செய்து கொள்ள விரும்புகிறோம். பொருத்தங்கள் எப்படி, குண்டூசியாரே?

பொருத்தம் பார்த்துச் சொல்லுவதற்கு நான் புரோகிதரல்லவே! ஆனல்

ஒன்று சொல்கிறேன்; இக்கல்யாணங்கள் முடிந்து, நீங்கள் மூவரும் சேர்ந்தாற்போல் தலை தீபாவளிக்கு மாமியார் வீட்டிற்குச் சென்றால் அந்த வீடு "அமர்க்களமாய்"த் தானிருக்கும்!

ஏ. சுப்பிரமணியன்
(கணக்கப் பிள்ளை, வலசை)

"குண்டூசி"யில் வெளியாகிய "எதிரும் புதிரும்" தொடர் கதையை எழுதியவர், "கிருஷ்ண பக்தி" வசனகர்த்தாக்களில் ஒருவரான அதே கு. ப. சேது அம்மாள் தானா? அல்லது இவர் வேறா?

இருவரும் ஒரே நபர் தான். காலஞ்சென்ற பிரபல கதாசிரியர் கு. ப. ராஜகோபாலனின் சகோதரியும் இவரே தான் என்பதையும் நீர் தெரிந்து கொள்ளலாம்.

டி. ஆர். வேலுச்சாமி (மணப்பாறை)

பி. ஏ. பெரிய நாயகியின் சொந்த ஊர் எது? தற்போதைய விலாஸம் என்ன?

"அழகிய பொம்மைகளின் பிறப்பிடமான பண்ருட்டியில் பிறந்தவர் தான் பெரிய நாயகியும்" என்பதைக் கேட்க ஆச்சரியம் அடைவீர்! அவரது தற்போதைய விலாஸம்:—நெ 5, ஸர், தியாகராயா ரோடு, தியாகராய நகர் சென்னை-17.

பி. கே. ஸி. எம். பழனிச்சாமி (மதுரை)

டி. கே. எஸ். சகோதரர்கள் எத்தனை பேர்? அவர்களது சொந்த ஊர் எது!

டி. கே. எஸ் சகோதரர்கள் நால்வர். டி. கே. சங்கரன், டி. கே. முத்துசாமி. டி. கே. ஷண்முகம், டி. கே. பகவதி, ஆகியோர். இவர்களது சொந்த ஊர் திருவனந்தபுரம்.

எஸ். கிருஷ்ணன் (மலேயா)

பி. எஸ். கோவிந்தன் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? (அவர் ஆண் ஜாதியைச் சேர்ந்தவர் என்பதென்னவோ எனக்குத் தெரியும்!) அவர் முதன் முதலில் நடித்த படம் எது?

நாயுடு ஜாதியைச் சேர்ந்தவரான பி. எஸ். கோவிந்தன் நடித்த முதல் படம் "லீலாவதி சுலோசனா."

"ஜூபிடர் பிரியன்" (மதுரை)

பரணி பிக்சர்ஸார் தற்போது என்ன படம் தயாரித்து வருகிறார்கள்? அதன் டைரெக்டர் யார்? அதில் யார் நடிக்கிறார்கள்? இக்கம்பெனியின் விலாஸம் என்ன?

பரணி பிக்சர்ஸார் "காதல்" என்ற படத்தை தமிழ்-தெலுங்கு ஆகிய பாஷைகளில் தயாரித்து வருகின்றனர். பானுமதியின் கணவர் ராமகிருஷ்ண ராவ் டைரெக்ட செய்யும் இப்படங்களில் பானுமதி, நாகேஸ்வரராவ், முக்கமாலா, கே. வி. சுப்பராவ், சுரபி ஆகியோர் நடிக்கின்றனர் விலாஸம்: பரணி பிக்சர்ஸ், வைத்தியராமன் தெரு, தியாகராய நகர், சென்னை—17.

ஆர். வைத்திய நாதன்
(கடலூர் என். டி.)

டைரெக்டர் ஆவதற்குத் தனிப் படிப்பு உண்டா? இது சம்பந்தமான புஸ்தகங்கள் உண்டா?

படிப்பாவது, மண்ணாவது! பயிற்சியோ, அநுபவமோ, படிப்போ இல்

"பிச்சைக்காரி" தமிழ்ப் படம் சென்னையிலும் வெளியூர்களிலும வெற்றிகரமாய் ஓடிககொண்டிருக்கிறது. அதில் பி. எஸ். சரோஜா திறம்படநடித்திருககிறார்.



'நண்பன்' தமிழ்ப் படத்தில் ஜோஸ், பி. வி. தேவன, ஜி. எம. ஹேஸ்டிங்ஸ், பி. எஸ். எப. பிராந்தரி ஆகியோர் தோன்றும ஒரு காட்சி.

லாமல் சினிமா உலகில் செய்யப் பட்டு வரும் வேலை இது ஒன்று தான். வாய்ச் சவட்டால் வீரராகவோ, பட முதலாளி யின் 'பக்தரா'கவோ, அல்லது தாமே பட முதலாளியாகக் கூடிய பணக்கா ரராகவோ இருந்தால் சுலபமாய் டைரெக்டர் ஆகிவிடலாம்.

அர்சு (நாகூர்)

பரணியின் மூன்றாவது தயாரிப்பு "காதல்" என்று விளம்பரப்படுத்தி யிருக்கிறார்களே? அவர்களுடைய பூர்திய தயாரிப்புகளில் ஒன்று "லைலா மஜ்னு" இன்னொன்று எது?

அவர்களது முதல் தயாரிப்பு "ரத்ன மாலா" தெலுங்குப் படம்.

ஜே. தக்ஷிணா மூர்த்தி (பொலாரம்)

சினிமா உலகில் தற்போது உள்ள புகழுக்குத் தக்கபடி கீழ்க் கண்ட பேர்களை வரிசைப் படுத்திக் கூற வும்:—கே. ஆர். ராமசாமி, பாலய்யா, தியாகராஜ பாகவதர், மஹாலிங்கம், எம். ஜி. ராமச்சந்திரன், டி. ஆர். ராமச்சந்திரன், எஸ். ஏ. நடராஜன்.

பாலய்யா, மஹாலிங்கம், கே. ஆர். ராமசாமி டி ஆர். ராமச்சந்திரன் தியாகராஜ பாகவதர், எம் ஜி. ராமச் சந்திரன், எஸ். ஏ. நடராஜன்.

தமிழனுக்குத்தான் புத்தி அதிகம் என்று நான் சொல்லுகிறேன். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

நீங்கள் அழுத்தமாய் சொல்லாமலிருந்தால் கூட தமிழனுக்குப் புத்தி அதிகம் என்பதை நான் மறுக்க வில்லை.

பி. ஏ. கோபால் (கீரமங்கலம்)

ஆசை அறுபது நாள், மோஹம் முப்பது நாள் என்பார்களே, காதல் எத்தனை நாள்?

இது தெரியாதா. கல் யாண நாள் வரையில்!

ஏ. சுப்புராஜ் (குண்டனை)

"வாழ்க்கை" படத்தில் வைஜ யந்தி கார் ஓட்டுவதாகக் காட்டுகிறார் களே? அவருக்கு உண்மையாகவே கார் ஓட்டத் தெரியுமா?

ஓட்டத் தெரியும்; ஆனால் அவர் ஓட் டும் காரில் நாம் பிரயாணம் செய்வது அபாயகரமானது. பாடிக் கொண்டே ஓட்டி எங்காவது மோதி விடக் கூடும் அல்லவா!

பி. எஸ். அப்துல் ரஹீம் (கட்டிமேடு)

பிரபல சினிமா நடிகரான டி. ஆர். ராமச்சந்திரன், டி. ஆர். ராஜகுமா ரிக்கு அண்ணனா? தம்பியா?

பிரபல நடிகர் டி. ஆர். ராமச்சந்திரன் ராஜகுமாரியுடன் பிறந்தவரல்ல. ஆனால் ராஜகுமாரிக்கு டி. ஆர். ராமச் சந்திரன் என்ற ஒரு தம்பி இருப்ப தென்னவோ உண்மைதான்.

துரைசாமி (குண்டனை)

டி. கே. ஷண்முகம் நடித்த முதல் படம் எது?

"மேனகா"

எம். கே. ராதா கிருஷ்ணன் (திருவனந்தபுரம்)

வருஷங்கள் ஓடிக் கொண்டிருக் கின்றன. ஆனால் பாகவதர் நடிக்கும் புதுப் படம் ஒன்றைக் கூடக்

மலேரியாவினால்
நான் சாகத்தான்
போகிறேன்
என்று எண்ணினேன்

இறுதியில்
'பாலுட்ரின்'
என்னை மீட்டுவைத்தது

சென்றதடவை நான் காரியமாக ஊருக்குப் போனபோது மலேரியா என்னை முடித்துவிடப் பார்த்தது. நான் கணக்கில் அடித்த ஜுரம்தான் எத்தனைக் கஷ்டத்தைக் கொடுத்துவிட்டது! குணமாகும் என்கிற நம்பிக்கையையே இழந்துவிட்டேன். கடைசியில, ஒரு நண்பரின் யோசனையின்பேரில் தினம் ஒரு மாத்திரை வீதம் நான் 'பாலுட்ரின்' சாப்பிட ஆரம்பித்தேன். மூன்றே நாடகளில் ஜுரம் பறந்தோடிவிட்டது. நான் முற்றிலும் புதிய மனிதனாகவே மாறிவிட்டதாகக் கருதலானேன். அதுமுதலாக நான் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சாப்பாடடுக்குப் பிறகு ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை உட்கொண்டு வருகிறேன். மலேரியாவும் என் ஜோலிக்கு வருவதில்லை.

பாலுட்ரின்*
டிரேட் மாாக்

மலேரியாவுக்கு ஓர் அற்புதமான மருந்து

* அனுவுக்கு ஒரு வில்லை

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்

.IX-P 138 TM

நாகூரின் டைரெக்ஷனில் துரிதமாய் தயாராகி வரும் ''அமரகவி''யில லக்ஷ்மியும், தங்கவேலும் தோன்றும் ஹாஸ்யக கட்டம்.

காணேமே. அவருடைய இனிய குரல் மாறி விட்டதாகவும், நோய் வாய்ப் பட்டிருப்பதாகவும் காரணங்கள் கூறப்படுவது உண்மையா?

பாகவதரின் படம் வெளி வந்து மூன்று வருஷங்களுக்கு மேலாவது உண்மை தான்; ஆனால் நீர் குறிப்பிட்டுள்ள வதந்திகள் உண்மையல்ல. 'அமரகவி' 'வஸு', ''வீணவதி'' படங்களில் அவர் தற்போது நடித்துக்கொண்டிருக்கிறார்.

ஏ. கே. பழனிச்சாமி (தாராபுரம்)

எனக்குக் கத்திச் சண்டை பழக மிக ஆசையா யிருக்கிறது. இதற்கு என்ன வழி?

இரவு பத்து மணிக்குமேல் ஒரு பத்து நாளைக்கு தொண்டை கிழியக் கத்தும். பக்கத்து வீட்டுக்காரர் தானாக உமக்கு சண்டை பழக்கிக் கொடுத்து விடுவார்!

வெ. தியாகராஜன் (மாணைசார்)

''மச்சரேகை'' படத்தில் ஜக்கம்மாளாக நடிக்கும் சாரதாம்பாளின் பெயருக்கு முன்னால் ''டிரியோ'' என்ற பதம் சேர்க்கப்பட்டிருக்கிறதே. காரணம் என்ன?

சுமார் இருபது வருஷங்களுக்கு முன் சாரதாம்பாள் ''டிரியோ டேயன்னா டேயன்னா — டையன்னா, டோனா, டேஎன்னா இட்டன்னா'' என்று ஒரு தமாஷ் பாட்டை இசைத்தட்டில் பாடி, அது மிக பிரசித்தி பெற்றதன் விளைவாக அவரை ''டிரியோ சாரதாம்பாள்'' என்றழைக்கத் தொடங்கினர். இது போலவே பி. எஸ். சிவபாக்கியத்தை ''வண்ணான் வந்தானே சிவபாக்கியம்'' என்று அந்தக் காலத்தில் குறிப்பிட்டு வந்தனர்.

ஜே. அப்பாஸ் (வழுத்தூர்)

ஜூபிடர் பிக்சர்ஸார் வெளியிடும் படங்களிலெல்லாம் ''எம். சோமசுந்தரம் தயாரிப்பு'' என்றே காணப்படுகிறது. ''எஸ். கே. மொஹிதீன் தயாரிப்பு'' என்று ஏன் ஒரு படத்தில் கூடக் காணப்படவில்லை?

ஜூபிடர் பிக்சர்ஸ் புனர் ஜன்மம் பெற்று ''கண்ணகி'' படத்தை ''எம். சோமசுந்தரம் தயாரிப்பு'' என்று வெளியிட்டார்கள். அது அமோகமாக வெற்றி பெற்றது. அதுமுதல் சோமசுந்தரத்தின் பெயரில் அதிர்ஷ்டம் இருப்பதாகக் கருதி அதுபோலவே இதுவரை வெளியிட்டு வருகிறார்கள்.

எம். பி. எம். சாஹிப் (கோவிந்தக்குடி)

எஸ். வி. சஹஸ்ரநாமம் தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்? அவருடைய சொந்த ஊர் எது? எந்த ஜாதியைச் சேர்ந்தவர்?

சஹஸ்ரநாமம் தற்போது ''மணமகள்'' தமிழ்ப் படத்தில் நடித்து வருகிறார். ஐயர் ஜாதியைச் சேர்ந்த அவருடைய சொந்த ஊர் கோவை ஜில்லாவிலுள்ள சிங்கநல்லூர் ஆகும்.

என். சுந்தரம்பிள்ளை (அராலி, இலங்கை)

பி. யு. சின்னப்பா ஏன் ''ரத்னகுமார்'', ''வனசுந்தரி'' போன்ற மந்திரமும், மாயமும் நிறைந்த படங்களில் நடிக்கிறார்? சமூகப் படங்களில் அவருக்கு நடிக்கத் தெரியாதா?

தெரியாமலென்ன? முன்பே அவர் சில சமூகப் படங்களில் நடித்திருப்பது தான் உமக்குத் தெரியாது போலிருக்கிறது.

சா. ஸ்ரீநிவாஸன் (போரையார்)

சென்னை தணிக்கை போர்டிற்கு ரீஜனல் ஆபீஸராக நியமிக்கப்பட்டுள்ள கே. ஸ்ரீநிவாஸன் "ஹிந்து" பத்திரிகையின் ஆசிரியரா? அல்லது "சிரஞ்சீவி" பத்திரிகையின் ஆசிரியராயிருந்த "கே. ஸ்ரீ."யா?

இருவருமல்ல. இவர் வேறு. அடையாளத்திற்காக இவரை பத்திரிகை உலகில் "பணிச்சொடி ஸ்ரீநிவாஸன்" என்று குறிப்பிடுகிறார்கள்.

வி. ராமசாமி (கவவாசல்)

"ஓர் இரவு" படத்தில் ராகினி ஏன் நடிக்கவில்லை?

இந்தப் படம் தயாராகி வந்தபோது ராகினி தேக அசௌகரியமாயிருந்தது காரணமாயிருக்கலாம்.

எஸ். கிருஷ்ணன் (பெரியதாராபுரம்)

"ராஜா விக்கிரமா" படத்தில் நடிக்கும் என். எஸ். சுப்பையா, என். எஸ். கிருஷ்ணனின் தம்பியா?

'இல்லை'யென்று நான் முன்பே பதில் கூறியிருப்பதை நீர் படிக்கவில்லை என்று தெரிகிறது.

கே. எஸ். பார்த்தசாரதி (கும்பகோணம்)

பி. எஸ். கோவிந்தன் சேலத்தில் மாரடைப்பினால் இறந்துவிட்டதாக எங்கள் ஊர் பூராவும் பரவியிருக்கும் செய்தி உண்மையா, பொய்யா?

அட, பாவமே! கல்லுப் போலிருக்கும் கோவிந்தனை எதற்காக உங்கள் ஊரார் சாக அடிக்கிறார்கள் என்று தான் தெரியவில்லை! கோவிந்தன் தற்போது சென்னையில் "என் சகோதரி" என்ற படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

"கோணூசி" (நெல்லைபாநசா)

அழகில் எது சிறந்தது? இயற்கை அழகா? செயற்கை அழகா?

இயற்கை அழகுதான். ஏனென்றால் இயற்கை அழகு பயனை எதிர்பார்த்து ஏற்பட்டதல்ல. ஆனால் செயற்கை அழகோ பிரதிபலனைக் கருதியே ஏற்பட்டதல்லவா?



இனம்! இனம்!! இனம்!!!

எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரீஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும் பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றின் விலை ரூ. 1—15—0;
3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட் வாட்சும், நியூ கோல்டு மோதிரமும் அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்:

AMRIT PHARMACY (G. M.) Jullundur City.

பிறந்த நாள்

23 ஆகஸ்ட், 1914

'அறுத்துக் கெடுப்பதில்' அபாரப் புகழ் பெற்றுவரும் பாலய்யா சினிமா உலகில் வில்லனாக நுழைந்து புகழ் பெற்ற பின், ஹாஸ்ய பாகங்களை ஒரு கை பார்த்துவிட்டு, இடைக்காலத்தில் கதாநாயகனாகவும் வேஷம் போட்டிருக்கிறார். தற்போது அமோஹமான நக்ஷத்திரப் புகழுடன் விளங்கும் பாலய்யா ஆகஸ்ட் மாதத்தில் பிறந்தவரே.

25 ஆகஸ்ட், 1929

பால நக்ஷத்திரமாய் சினிமாவில் நுழைந்து, பல கால அஞ்ஞாத வாசத்திற்குப் பின் மீண்டும் தோன்றிப் புகழ்பெற்று வருபவர் எஸ். வரலக்ஷ்மி. தம் பாட்டைத் தாமே இனிமையாய்ப் பாடிவரும் அவர் தெலுங்கு, தமிழ் ஆகிய இரு பாஷைப் படங்களிலும் ஒரு முன்னணி நக்ஷத்திரமாய் விளங்கி வருகிறார். இம்மாதத்தில் பிறந்தவரே.

ஆகஸ்ட், 1927

அரை டஜன் படங்களுக்கு மேல் ஏககாலத்தில் நடித்துக் கொண்டு, தற்போது அபார மௌஸுடன் விளங்கும் ஸ்திரீ நக்ஷத்திரமான மாதுரி தேவியும் இந்த ஆகஸ்ட் மாதத்தில் பிறந்தவரே. அவருக்கு இந்த மாதத்தில் 24-ம் வயது பூர்த்தியாகிறது.

7 ஆகஸ்ட், 1933

'தாய் எட்டடி என்றால், குட்டி பதினாறடி'—என்ற பழமொழியை மெய்ப்பித்துவிட்டார் வைஜயந்திமாலா—"வாழ்க்கை" மூலம் ரஸிகர்களின் அளவற்ற அபிமானத்தைப் பெற்றுள்ள வைஜயந்தி அவரது தாயார் பிறந்த இதே மாதத்தில் பிறந்தவர்.

ஆகஸ்ட், 1918

ரஸிகர்கள் எந்தப் படத்தை மறந்தாலும் "மங்கம்மா"வை மட்டும் மறக்கவே முடியாது. வஸுந்தராவின் இயற்கையான நடிப்பு, இனிமையான பாட்டுகள், வியக்கத் தக்க ஆங்கில நடனம்—இவையனைத்தும் ஒருங்கே அமைந்த படம் அது. மேனாடு சென்று வரும் பாக்கியம் பெற்ற வஸுந்தரா இம்மாதம் 34-வது வயதை அடைகிறார்.

27 ஆகஸ்ட், 1908



தெருவெங்கும் திருப்பாக்களைப் பாடி, தேவாரப் பாடகாசிரியராக மதுரையில் அமர்ந்திருந்த தண்டபாணி தேசிகரை (வேல்) "பட்டினத்தார்" சென்னைப் பட்டினத்திற்கு இழுத்து வந்தது. மற்றும் பல படங்களில் நடித்துவிட்டு, தேசிகர் தற்போது சங்கீதக் கச்சேரிகளில் ஈடுபட்டிருக்கிறார். இம்மாத நக்ஷத்திரங்களில் வயது முதிர்ந்தவரவர்.

இது செய்தி

காந்திஜியின் வாழ்க்கை

கேப்ரியல் பாஸ்கல் என்ற அமெரிக்கர், காந்திஜியின் சரிதத்தைப் படமாக்க தீவிரமான முயற்சிகளில் முனைந்துவிட்டார். அதற்கான சம்மதத்தையும், அகமதாபாத் காந்திஜி டிரஸ்டிலிருந்து அவர் பெற்று விட்டாராம். காந்திஜி எழுதியுள்ள சுய சரிதத்தையும், ஆப்ரிக்காவில் அவர் நடத்திய சத்யாக்ரஹத்தையும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்குமாம் இப் படம். 'எமிலி ஜோலாவின் வாழ்க்கை' என்ற பிரபல ஆங்கிலப் படத்தின் வசனங்களை எழுதிய ஜெரா ஹெர்லெக் என்பவர் படத்தின் சம்பவங்களைத் தொகுக்கவும், வசனங்கள் எழுதவும் இந்தியாவுக்கு வந்து பம்பாயில் தங்கியிருக்கிறார். இந்தப் படம் 1952ம் வருஷ முடிவுக்குள் தயாராகி விடுமென்றும், 1953ம் வருஷ ஆரம்பத்தில் திரையிடுவதென்றும் முடிவு செய்திருக்கிறார்களாம். படத்தில் நடிப்பதற்கான நடிகர்கள் தேர்தல் ரொம்பக் கடுமையாக நடந்ததாம். காந்திஜியாக பால் முனியும், நேருவாக சார்லஸ் போயரும் நடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஜெரா ஹெர்லெக் என்ற இந்தக் கதாசிரியரைப் பத்திரிகை நிருபர்கள், "உங்கள் தலைவர் ரூஸ்வெல்ட் வாழ்க்கையை விட்டு ஏன் காந்திஜீ வாழ்க்கையைப் படமாக்கத் தயாரிப்பதற்கு முனைந்தீர்கள்" என்று கேட்டார்கள். அதற்கு அவர், 'ரூஸ்வெல்ட் பெரிய மனிதர்தான். ஆனால் காந்திஜீயையும் அவரையும் ஒப்பிடமுடியாது. தாஜ்மஹாலுடன் கூட குடிசையை ஒப்பிட முடியுமா? இந்தியாவைவிட, அமெரிக்காவுக்கு—ஏன் உலகத்துக்கே காந்திஜீயின் வாழ்க்கைப் படம் இப்பொழுது முக்கியத் தேவை" என்று தம் அபிப்பிராயத்தைக் கூறியிருக்கிறார்.

இந்தப் படத்தைத் தயாரிக்க ஐந்து மில்லியன் டாலர்கள் செலவாகுமென்று மதிப்புப் போட்டிருக்கிறார்கள். இப் படத்தினால் கிடைக்கும் லாபத்தில் நவஜீவன் டிரஸ்டுக்கு ஒரு பகுதி கிடைக்கும். தவிர காந்திஜீ ஞாபகார்த்த நிதிக்கும் சம அளவு தொகை கொடுக்கப்படுமாம்.

கதம்ப சங்கீத நிகழ்ச்சி

ராயபுரம், ஒய். எம். சமூவல் மியூஸிகல் அகாடமியினர், அவர்களது டைரக்டர் பி. எம். ஜே. தைரியம் நடத்திய ஒரு சங்கீத கதம்ப நிகழ்ச்சியை சென்ற மாதம் 15ம் தேதி நடத்தினார்கள். இந்த நிகழ்ச்சிக்கு நடிகர் வி. நாகய்யா தலைமை வகித்தார். தைரியம் பலவித வாத்தியங்களை வாசித்துக் காண்பித்தார். அவைகளில் அவர் வாசித்த 'வாள்' வாத்தியம் குறிப்பிடத் தக்கது. நூதனமானதாக இருந்தது. தலைவர் நாகய்யா அன்று குறிப்பிட்டது போல, சினிமாக்களில் இந்த வாள் வாத்தியம் கையாளப்பட்டால் நல்ல பலன் ஏற்படக்கூடும். நாகய்யா, டைரெக்டர் தைரியத்தின் திறமையைப் பாராட்டி அவர் தலைமையில் நடைபெறும் கழகம் முன்னேற்றமடையுமென்று தைரியம் கூறினார். நமது ஆசிரியர் "குண்டூசி" அன்றைய நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக்கொண்டவர்களுக்கு கழகத்தின் சார்பாக பரிசுகளை வழங்கினார். அவர், கழகத்தின் நோக்கங்களை மிகவும் சிலாகித்துப் பேசி அது மேலும் மேலும் விருத்தி அடைய ஆசி கூறினார்.

தமாஷா வரி சலுகை

நெல்லூர் ஆந்திரா சபையினர் சென்ற மாதம் 23ம் தேதி, மந்திரி கனம் பி. கோபால் ரெட்டிக்கு, அவர் ஆந்திர சர்வ கலா சாலையின் உப-அத்யக்ஷகரானதைப் பாராட்ட ஒரு வரவேற்பு அளித்தனர். தமக்களித்த வரவேற்புக்கு வந்தனம் தெரிவித்து பதிலளிக்கையில் அவர், நாடகங்களுக்கு தமாஷா வரியிலிருந்து விலக்கு அளித்திருப்பதுபோல அதே சலுகை சங்கீத, நாட்டியக் கச்சேரிகளுக்கும் நீடிக்கப்படலாம் என்று கூறினார்.

சினிமா ரஸிகர்கள் சங்கம்

சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் சார்பில் சென்ற மாதம் 29ம் தேதி ஒரு கூட்

டம் நடைபெற்றது. ஸ்ரீமதி பாரிஜாதம் நாயுடு "படங்களில் ஸெக்ஸ் அப்பீலும், ஸென்ஸாரும்" என்பது பற்றிப் பேசினார். இந்தக் கூட்டத்திற்கு மத்திய தணிக்கை போர்டு சென்னைப் பிராந்திய ஆபீஸர், கே. ஸ்ரீனிவாசன் தலைமை வகித்தார்.

ஜமீன்தார் ஆரம்ப விழா

சென்ற மாதம் 9ம் தேதி, கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் "ஜமீன்தார்" படத்தின் ஆரம்ப விழா நடைபெற்றது. பக்ஷிராஜா ஸ்டுடியோவின் முதலாளி எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு விழாவுக்குத் தலைமை வகித்து, காமிராவை ஓடவிட்டார். இப்படம் ஜூபிடர் பிக்சர்ஸ்—சங்கீதா பிக்சர்ஸின் கூட்டுத் தயாரிப்பாகும். படத்தை பி. வி. கிருஷ்ணய்யர் டைரெக்ட் செய்வார். இப்படத்திற்கான பாடல்கள் இப்பொழுது சென்னையில் பதிவாகி வருகின்றன.

ஆபாசமாக நடிக்கத் தடை

சென்ற மாதம் 21ம் தேதி மதுரையில், மதுரை நகர் மாதர் காங்கிரஸின் மூன்றாவது ஆண்டு விழா நடைபெற்றது. மகாநாட்டில் பல கண்டனங்களும், தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. சினிமாக்களிலும், விளம்பரங்களிலும் நடிகைகளின் படங்களை மோசமான முறையில் வெளியிடுவது பெண் சமூகத்தையே இழிவு படுத்துவதாக கண்டனம் செய்தார்கள். ஆகவே இது விஷயத்தில் நடிகைகள், சினிமாப் படம் தயாரிப்போர் ஆகியவர்களுக்கு ஆபாசமாக நடிப்பதற்கும், ஆபாசமான படம் தயாரிப்பதற்கும் சட்டபூர்வமான தடை விதிக்கவேண்டுமென சர்க்காரைக் கேட்டுக் கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

ராஜாஜி கலைக் கழகத்தின் "லக்ஷியவாதி" நாடகத்தை 'கல்கி' ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி பாராட்டுகிறார்.



விலாஸ மாற்றம்

ஜூபிடர் பிக்சர்ஸ் ஜூபிடர் பிக்சர்ஸ் ஸர்க்யூட் ஸ்தாபனங்கள் தங்கள் காரியாலயங்களை கீழ்ப்பாக்கத்திலிருந்து—53, பீடர்ஸ் ரோடு, கதீட்ரல் சென்னை—6 என்ற விலாஸத்திற்கு மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

லாவண்யாவின் அடுத்தது !

லாவண்யா பிக்சர்ஸார், தாங்கள் அடுத்தபடியாகத் தயாரிக்க திட்டமிட்டிருக்கும் சமூகப் படத்தை டைரெக்ட் செய்ய ராம்னாத்தை ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். எஸ். டி. சுந்தரம் எழுதி, நாடகமாக நடிக்கப்பட்டு வரும் "மனிதனும் மிருகமும்" என்ற கதையே இவர்களது படமாக இருக்குமென்று தெரிகிறது. ஜூபிடரின் கூட்டுறவில் இக்கதை நெப்டியூனில் படமாகுமென்றும், கே சாரங்கபாணி, டி. ஆர். ராமச்சந்திரன் பிரதம பாகங்களில் நடிக்கக் கூடுமென்றும் தெரிகிறது.

கர்நாடக சங்கீதக் கழகம்

தென்னிந்தியாவில் கர்நாடக சங்கீதக் கழகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான விஷயங்களை ஆலோசிக்க ஒரு மகாநாடு சென்ற மாதம் 18ம் தேதி ஹைதராபாத்தில் நடைபெற்றது. இந்த மகாநாட்டில், ஹைதராபாத், சென்னை, மைசூர், திருவாங்கூர், கொச்சி ஆகிய நான்கு ராஜ்யங்களின் பிரசமர்களும், கல்வி மந்திரிகளும் கலந்து கொண்டனர். இந்த மகாநாட்டில் நிறைவேறியுள்ள நகல் மத்திய சர்க்காருக்கும் மற்ற நான்கு ராஜ்யங்களின் சர்க்காருக்கும் அனுப்பி வைக்கப்படும். சர்க்காரின் அங்கீகாரம்

மாதுரி தேவி சமீபத்தில் வட இந்தியாவில் பிரயாணம் செய்தபோது குதுப்மினாரைப் பார்த்துவிட்டு வந்தாரென்பதைக் காட்டுகிறது இப் படம்.

கிடைத்த பின், ஒவ்வொரு சர்க்காரும் எவ்வளவு பங்கு பணம் செலுத்த வேண்டும் என்பது முடிவு செய்யப்படுமாம். கழகம் மைசூரிலோ அல்லது சென்னையிலோ நிறுவப்படுமாம். கர்நாடக சங்கீதம், நடனம் முதலிய கலைகளை வளர்ப்பதே இந்தக் கழகத்தின் நோக்கமாம். சர்வ கலாசாலையைப் போல இந்தக் கழகமும் தனிச் சுதந்திரம் வாய்ந்த ஒரு ஸ்தாபனமாக இருக்கவேண்டுமென்றும், சென்னையிலுள்ள கர்நாடக சங்கீத மத்திய காலேஜ் தான் இக் கழகத்துடன் இணைக்கப்பட்ட பிரதம ஸ்தாபனமாயிருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. கர்நாடக சங்கீதம் நடனம் ஆகிய கலைகளின் சாஸ்திர நெறிகள், அக் கலைகளைப் பழகும் முறை முதலிய அம்சங்களில் உயர்தர ஆராய்ச்சிகள் செய்வதற்கும், உயர்தர கல்வி போதிப்பதற்கும் இந்தக் கழகம் ஏற்பாடு செய்யுமாம்.

ஜீவபூமி

சென்ற மாதம் 8ம் தேதி, மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் "ஜீவபூமி" என்ற சரித்திர நாடகம் அரங்கேறியது. சரித்திர சம்பந்தமான இந்த நாடகத்தை, அன்று திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் கிளப் அங்கத்தினர்கள் திறம்பட நடித்தார்கள். அன்றைய நாடகத்திற்கு, சென்னைப் பிரதம நீதிபதி கனம் பி. வி. ராஜமன்னார் தலைமை வகித்தார். சபையின் தலைவர் வி. கே. என். சாரி, நாடகாசிரியர் 'சாண்டில்யன்', வான்போர் பயிற்சி அளித்த ஸ்டண்ட் சோமு, பாடல்கள் அமைத்துக் கொடுத்த வி. சீதாரமன் ஆகியோருக்கு சபையின் ஆதரவில் வெள்ளிக் கோப்பைகள் பரிசளித்தார்.

மனைவி

"மனைவி" என்ற சமூக நாடகத்தை, சென்ற மாதம் 12ம் தேதி, ஸ்ரீ கந்தன் கலா நிலயத்தினர் நடித்தார்கள். ஏ. வரதராஜனின் டைரெக்ஷனில் நடைபெற்றது இந்த நாடகம்.

பொன்னி

ஓய். ஏ. சி. குழுவினர் "பொன்னி" என்ற நாடகத்தைச் சென்ற மாதம் 22ம் தேதி சென்னை சௌந்தர்ய மஹாலில் நடித்தார்கள். இந்த நாடகம் 'தூண்டுகோல்' வளர்ச்சி நிதிக்காக நடைபெற்றது.

லக்ஷியவாதி

சென்ற மாதம் 15ம் தேதி ராஜாஜி கலைக் கழகத்தார் "லக்ஷியவாதி" என்ற சமூக நாடகத்தை அரங்கேற்றினார்கள். அன்று நாடகத்திற்கு 'கல்கி' ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார்.

தியாகச் சின்னம்

திருக்கோகர்ணம், கலா ரஞ்சனி நாடக சபையினர் "தியாகச் சின்னம்" என்ற தங்களது முதல் நாடகத்தை, அறந்தாங்கி நீலா டாக்கீஸில் அரங்கேற்றினார்களாம்.

வாழ்த்துகிறோம்

சென்னையிலுள்ள பிரபல விளம்பர ஆலோசகரான ஸ்ரீ. பி. எஸ். அய்யரது குமாரரும், பி. எஸ். மணி அண்ட் கம்பெனியின் மானேஜருமான ஸ்ரீ பி. எஸ். பரமேஸ்வரன் சென்ற மாதம் 15ம் தேதி கிரஹஸ்தரானார். மதுரை பிரின்ஸிபல் சப் ஜட்ஜ் ஸ்ரீ ஸி. ஆர் விஸ்வநாத அய்யரின் மகள் சௌ. மீனாட்சி மணமகள்.

1st Prize Winners of Competition No. 54.

1st prize winners of C. No. 54. 1. A. K. V Chettiar, Arni. 2. R. C. Panda, Dehra Dun. 3 B. Singh. Dehra Dun. 4. T M. Achary, Rayachoti. 5. P. V Gopal, Chengleput. 6. N. R. Pillai, Travancore. 7. S. Subbiah, Salem. 8. B R R Iyer Coimbatore 9. A. T. G. Reddiar, Ramnad. 10. P. K. V. Thimmappa, Raichur. 11. D. Mallaya Srikakulam 12. N. S. Pinto Hireboil. 13. T. P. Pillai, Chengleput. 14. E. P. T. Swami, Salem. 15. A. Latif, Nalgonda. 16. M. Suleman, Talaun. 17. N. S. Rao, Warangal. In addition 18 persons are awarded IIIrd Prize and one 5th Prize.

Full particulars are published in the Rainbow dated 25—7—51.

ரிஜிஸ்டர் நெ. 249 **ரூ. 25,000 பரிசு** போட்டி நெ. 56

M/S. Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப்பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின் பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12.000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000 முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றாம் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000. முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ 1,000-ம் அளிக்கப்படும். எங்கள் சீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

RAINBOW COMPETITIONS

KEY S NO. 54 * 70 to 85 = 310

71	76	80	83
85	78	74	73
82	81	77	70
72	75	79	84

We hereby certify that the above is the solution in original deposited with us by Rainbow Competitions No. 54 on 18.6.51 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank

For The Premier Bank of India Ltd.

V. Ramanathan 15.7.51.

Agent, Madras.

முடிவு தேதி 13—8—51. விடை 27—8—51

பிரவேசக் கட்டணம்: கூபன் 1-க்கு ரூ. 1—0—0. 6 கூபன் கொண்ட செட் 1-க்கு ரூ. 5—0—0

342



விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:—78 முதல் 93 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 342 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.
விதிகள்:—தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூபன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூபனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தை கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாவது அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதை கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாயக் கட்டுப்படுவதாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்; அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்ப வேண்டிய விலாசம்:—

THE RAINBOW COMPETITIONS No. 56.

28 (3) Thandavaroya Gramani Street, Tondiarpet, Madras—21.

ரிஜிஸ்டர் நெ. 249. **ரூபாய் 25,000 பரிசு** போட்டி நெ. 57

சரியான விடை Premier Bank of India Ltd., Madras-ல் சீல் செய்து வைக்கப்பட்டுள்ளது. (மற்றவை மேலே கூறப்பட்டுள்ளது போல). முடிவு தேதி 27-8-51. விடை: 12-9-51

346

பிரவேசக் கட்டணம் கூபன் 1-க்கு ரூ. 1/- 6 கூபன் கொண்ட செட் 1-க்கு ரூ. 5/-



விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:—79 முதல் 94 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எப்படிக் கூட்டினாலும் 346 வரும்படி அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும். மற்ற விபரங்கள் மேற்கூறியதுபோல.

The Rainbow Competitions, No. 57,

28 (3) Thandavaroya Gramani St., Tondiarpet, Madras—21

மதுரையில் சிறப்பாக நடைபெற்றது இந்த விவாஹம். சினிமா உலகப் பிரமுகர்கள் பலரும், பத்திரிகைக்காரர்களும் ஏராளமாக வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் அனுப்பியிருந்தனர்.

* * *

அம்மாஞ்சி மாமனரானர். ஆமாம், அம்மாஞ்சி ஜி. பட்டு அய்யர்தான். தம் புத்திரி சௌ. நீலாயதாக்ஷியை, போஸ்டல் ஆடிட்டில் வேலை பார்க்கும் ஸ்ரீ பி. எஸ் நடராஜனுக்கு வெகு சிறப்பாகத் திருமணம் செய்து கொடுத்தார். சென்னை அபிராமபுரத்தில் அவர் பங்களாவில் நடைபெற்ற இந்த விவாகத்திற்கு சினிமாப் பிரபஞ்சத்திலுள்ள பிரமுகர்கள் பலரும் விஜயம் செய்து தம்பதிகளை ஆசீர்வதித்துப் பரிசுகள் வழங்கினர்கள்

* * *

கும்பகோணம் பிரபல ஜவுளி வியாபாரியான, ராணி ரெங்கய்யர் சன்ஸ் முதலாளி ஸ்ரீ. ஆர். பி. கிருஷ்ணய்யர், தம் குமாரர் சிரஞ்சீவி ராமாச்சாரிக்கு சௌ. வஸந்தாவைப் பாணிக்கிரஹணம் செய்து கொண்டார். தம் குமாரத்தி சௌ. சகுந்தலாவை, சிரஞ்சீவி ராமரெத்தினத்தத்திற்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார். சென்ற மாதம் 12ம் தேதி மதுரையில் நடைபெற்ற இந்த விவாகங்களின் கிரஹப் பிரவேச விழா 19ம் தேதி கும்பகோணத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வருந்துகிறோம்

சென்ற மாதம் 17ம் தேதி வைக்கம் வி. என். ராஜன் டைபாயிட் ஜுரத்தினல் அகால மரணமடைந்தது கேட்டு வருந்துகிறோம். ரேடியோப பாடகரான இவர், தற்பொழுது சேலம் ரத்னா ஸ்டுடியோவில் தயாராகிவரும் "யாசகன்" மலையாளப் படத்தின் சங்கீத டைரெக்ஷனில் வேலை செய்து வந்தார்.

* * *

பிரபல ஹார்மோனியக்காரரும், "ராதா கல்யாணம்" படத்தில் நாரதராக நடித்துள்ளவருமான கே. எஸ். தேவுடு அய்யர் சென்ற மாதம் 11ம் தேதி மதுரையில் மாரடைப்பினல் காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம்.

சென்னையிலும், வெளியூர்களில் மிகுந்த வெற்றி பெற்றுவரும் "பாதாள பைரவி" யில் என. டி. ராமராவ் தோன்றும் ஒரு காட்சி இது.

நடனம் ஆடினர்

சிலருக்குக் கோபமே வராது; சிலர் வாய் விட்டுச் சிரிக்கவே மாட்டார்கள்; மற்றும் சிலர் எப்போதும் முகத்தை 'கடுகடு' வென்றே வைத்துக் கொண்டிருப்பர்: இது அவர்கள் சுபாவம்! அதைப் போலவே நடனத்திலும் சிலருக்கு சில பாவங்கள் தான் முகத்தில் தெளிவாக அமையும். மற்றவை அவ்வளவாக ரமிக்காது. அப்படிப்பட்டவர்கள் அபிநயப் பதற்காக பாட்டுகளில் அவரவர்கள் முகத்திற் கேற்ற ரஸங்கள் அதிகம் அமைந்ததாக பாடல்கள் இருக்குமானால் அபிநயம் ரஸனையுடனிருக்கும்.

சென்ற மாதம் 8ந் தேதியன்று இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைடியின் ஆதரவில் கோகலே மண்டபத்தில் நடந்த குமாரி கே. ஹேமலதாவின் கச்சேரியில் ஸ்ருங்கார ரஸம் நிறைந்த பாடல்களுக்கு அபிநயம் பிடிக்கும் போது இதைப் போன்ற குறை அமைந்திருந்தது. கருணை, பயாநகம், பீபத்ஸ முதலிய ரஸங்களுக்குரிய "ஸ்தாயி", "ஸஞ்சரி" பாவங்களை விளக்கி, ஏற்ற பாட்டுகளை அமைத்துக் கொடுத்தால் அபிநயம் நன்கு சோபிக்கும். ஸ்ருங்கார ரஸ பதங்கள் கச்சேரியில் கட்டாயம் இருந்தே தீர வேண்டும் என்ற நிலை மாறினால் தான் இது சாத்யமாகும். "ஜதிஸ்வரம்" "வர்ணம்" முதலியவைகள் ஆங்கிக சுத்தத்துடன் அமைந்திருந்தன. "காலைத் தூக்கி", 'நடனமாடினர்", முதலிய பதங்களுக்கும் அபிநயம் நன்கு அமைந்திருந்தது. நடைமுறை வழக்கப்படி "ஜிப்ஸி", "மார்வாரி", "பாம்பாட்டி" முதலிய நடனங்களுடன் கச்சேரி முடிவுற்றது. பந்தநல்லூர் சொக்கலிங்கம் பிள்ளையின்—இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் பைன் ஆர்ட்ஸின் மாணவி குமாரி ஹேமலதா.

சென்னை மியூஸியம் தியேட்டரில் சென்ற மாதம் தஞ்சை சகோதரிகள் என்ற பெயருடன் விசா—பிரகதா இவர்களின் நடன அரங்கேற்றம் நடைபெற்றது. அன்றையக் கச்சேரி சாதாரண அரங்கேற்றமாக இல்லை. அரங்கேற அநுபவம் பெற்று, ஆடுவதில் நல்ல தேர்ச்சி பெற்ற நடிகளின் கச்சேரியைப் போலவே இருந்தது. "ஜதிஸ்வரத்தை" விசா ஆடினர். நடனம், ஸ்வரத்துடன் மனம் ஒன்றி வெளிபபடும் இயற்கையசைவுகளாகவே இருந்தது. "வர்ணத்தை" விசா, பிரகதா இருவரும் ஆடினர். இருவரும் சேர்ந்து ஆடிய சமயங்களில் ஒரே விதமான அசைவுகளையே ஒழிய மற்றபடி தாளத்துடன் சுத்தமாக அமைந்திருந்தது. சாத்விகாபிநயம் விசாவிடம் பூரணமாக அமைந்திருக்கிறது. "கண்ணனைக் கண்டதுண்டோ" என்ற பதத்தில் விசாவின் அபிநயம் உணர்ச்சியுடன் அமைந்திருந்தது. பிரகதாவின் அபிநயம் சுமாராகவே இருந்தது. "சின்னஞ் சிறு கிளியே", "பறவேனே" முதலிய பதங்களுக்கு அபிநயம் கலைமணத்துடன் அமைந்திருந்தது. அன்று அரங்கேற்றலுக்கு தலைமை வகித்த பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள், தலைமை உரையில் "நமக்கு இரண்டு சிறந்த நடன நக்ஷத்திரங்கள் கிடைத்தன" என்று கூறியது மிகப் பொருத்தமாக இருந்தது. "வர்ண"த்தில் ஜதித் தொகுப்புகள், பதவின்யாசம் முதலியவைகளை சிரத்தையுடன் அமைத்திருந்தார் நடன ஆசிரியர் பி. எஸ். கோபால கிருஷ்ணன். விசா-பிரகதாவின் சகோதரியான (சினிமா புகழ்) குமாரி என். ராஜம் அன்று பதங்கள் பாடினர்.

ஸ்ரீ தியாகராஜ ஸங்கீத ஸமாஜத்தின் ஆதரவில் சென்ற மாதம் 21ம் தேதியன்று மயிலை ரஸிக ரஞ்சனி சபையில் விசா—பிரகதா—சந்திராவின் நடனக் கச்சேரி நடைபெற்றது. அன்று நடுநடுவே ஆடிய (பேபி) சந்திராவிடம் நடனத்திற்கு வேண்டிய நல்ல லாகவம் அமைந்திருக்கிறது. இடைவேளைக்குப் பின் "சிங்கன் சிங்கி" என்ற ஒரு நடனம் நடைபெற்றது. அதில் அஹார்யம் பொருத்தமுடனிருந்தது. ஆனால் "சிங்

கன் சிங்கி" நடனம் பெயருக்கேற்ற படி மேற்போக்கான கிராம்மிய நடன மாக அமையவில்லை. அது இல்லாம லேயே கச்சேரி நடந்திருந்தாலும் சுவை குன்றியிராது. "எத்தனை சொன்னாலும்" என்ற பதத்திற்கு விசா அழகாக அபி நயம் பிடித்தார். "கண்ணனைக் கண்ட துண்டோ", "கிருஷ்ணா நீ பேகனே" என்ற பதங்களுக்கு பதவிந்நியாசப் நன்றாக செய்யப்பட்டிருந்தது சிறந்த நடன நக்ஷத்திரமாவதற்கு வேண்டிய நல்ல முக பாவமும். அழுத்தமான ஜதிகளும் லாகவமான அசைவுகளும், விசாவிடம் நன்கு அமைந்துள்ளன. சுத்தமான ஆங்கிகம் பிரகதாவிடம் அமைந்திருக்கிறது. ஆடும் போது சில சமயங்களில் பிரகதா ஜதிகளைச் சொல்லிக்கொண்டே ஆடுகிறார். "தாளம் தவறிவிடுமோ" என்ற பயம் மறைந்த பின் இந்தப் பழக்கமும் மறைந்து விடும். "தில்லானா" ஆடும்போது இருவர் அசைவுகளும் மாறி மாறி யிருந்தன; ஒழுங்கு வேண்டும். அதனால் சில சமயங்களில் தாளக் கட்டும் குறைந்திருந்தது அன்றும் குமாரி என். ராஜம் பதங்கள் பாடினார்

ரஸிக ரஞ்சனி சபா மண்டபத்திலேயே 22ம் தேதியன்று குமாரி கமலாவின் ஆடல் நடைபெற்றது. "வர்ணத்தின் இடையிடையே வந்த சொற்கட்டுகளை ரஸிகத்தக்க முறையில் அமைத்திருந்தார் நட்டுவனார் வழுவூர் ராமையா பிள்ளை. "மதுரா நகரிலோ, "கிருஷ்ணா நீ" முதலிய பதங்கள் வழக்கம் போல வ நன்றாக அமைந்திருந்தன. "பாம்பாட்டி நடனம்" என்று ஒன்றைத் தனியாக அமைத்துக் கொள்ளாமல் "நாதர் முடி மேலிருக்கும்" என்ற பாட்டிற்கு ஆடுவதை வழக்கமாகக் கொண்டிருப்பது போற்றத் தக்கதே. அதில் லயஞானமும் அபிநயமும். அழகான ஜதிகளும் லாகவமான ரேஜிவகளும், ரஸனையுடன் விளங்குகின்றன. "பச்சைபலே" என்ற பாட்டிற்கு அபிநயம் குறத்தி நடனமாக நடந்தது. அந்தக் குறத்தி உடை நடனங்களுக்கு நன்றாயிருக்குமே ஒழிய, மேடையில் அசல் குறத்தியாகக் காணவில்லை. நடனத்திலும் கிராம்மியச் சுவையை விட தீர்க்கமான ஜதிகளின் சுவையே அதிகம் இருந்தது அதன் பிற்பகுதியும், அபிநயமும் நன்றாக அமைந்திருந்தன. வேடன் உடையுடன் ஆடிய "வேடன் நடனம்" என்ற நிகழ்ச்சியும் ரஸனையுடன் இருந்தது. கதக்களி நடிகர்கள் சிலர் பக்ஷி பறவைகளைப் போல் ஆடி இயற்கையை அப்படியே அறிவுறுத்தி துள்ளிக் குதித்து ஆடும் வேடன் நடனத்திலுள்ள சுவை வேறு; இதன் சுவை வேறு. அன்றைய கச்சேரிக்கு பதங்கள் பாடிய கே. ஜே. சரஸாவின் குரல் இனிமையுடனிருந்தது.

"நந்தி"

திவாகருக்கு வரவேற்பு

சென்ற மாதம் முதல் வாரத்தில் சென்னைக்கு விஜயம் செய்திருந்த, செய்தி இலாகா மந்திரி கனம் ஆர். ஆர். திவாகருக்கு தென்னிந்திய பிலிம் சேம்பரின் சார்பில் அதன் தலைவர் ஏ. ராமையா ஒரு வரவேற்பளித்தார். சென்ற மாதம் 7ம் தேதி உட்லண்ட்ஸில் இந்த வரவேற்பு நடைபெற்றது. பல மந்திரிகளும், பட முதலாளிகளும், நக்ஷத்திரங்களும், பத்திரிகாசிரியர்களும் வந்திருந்தார்கள். தலைவர், அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் தமிழ் நாட்டு சினிமாத் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை எடுத்து விளக்கினர்.



சமீபத்தில் வெளிவந்துள்ள "மோஹன சுந்தரம்" தமிழ் படத்தில் பாலு முதலியாராக நடிக்கும் கே. எஸ். ஹரிஹரன்.

பெல் பிக்சர்ஸார் பூரண உரிமை பெற்றுள்ள "ஸ்திரீ சாகஸம்" தமிழ்ப் படத்தில் சூர்யபிரபா செய்யும் சாகஸங்களில் இது ஒன்று!



"மோஹன சுந்தர"
வாலிபர் மஹாலிங்கத்
தின் மனதை அந்த
ஜிப்ஸி பெண்ணின்
ஆட்டம் கவர்ந்து
விட்ட மாதிரி காண்
கிறதல்லவா !

கோவார்டினேட்டட் ஸிலி புரொடக்ஷன்ஸாரின் "சுகிர்த்" (மலையாளம்), "நண்பன்" (தமிழ்) ஆகிய படங்களில் நடிக்கும் புதிய முகம் குமாரி லக்ஷ்மி தேவி.

பொதுஜனம் பேசுகிறார்

★ யோசனை கூறுங்கள்!

உலகின் பல பாகங்களில் நடக்கும் முக்கியமான நிகழ்ச்சிகளை செய்திப் படங்களில் நாம் கண்டு ரஸிக்கிறோம். ஒவ்வொரு தியேட்டரிலும் வாரா வாரம் புதுப்புது செய்திப் படங்கள் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டு வருகின்றன. ஆனால், அங்குகாட்டப்படும் படமோ அத்தியேட்டரில் பல வாரங்கள் ஓடிக்கொண்டிருக்கும். ஒருவன் ஒரு படத்தை ஒரு தடவையோ அல்லது இரண்டு தடவையோ தான் பார்க்க முடியும். செய்திப் படத்தைப் பார்ப்பதற்காக, வாரா வாரம் ஒரே படத்தைப் போய்ப் பார்க்க முடியுமா! அதற்கு பண வசதி, நேர வசதி எல்லோருக்கும் கிடைக்குமா? செய்திப் படங்களை ஒரு மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ தொகுத்து, முழு நீளப் படமாக சனி, ஞாயிறுகளிலாவது—மாட்டினி காட்சிகளில்—காட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்தால் என் போன்றவர்களுக்கு உதவியாக இருக்கும். சர்க்கார் தயாரிக்கும் செய்திப் படங்களைத் தொடர்ச்சியாகப் பார்க்க மேலே கண்ட வழி தவிர வேறு மார்க்கம் தெரிந்தவர்கள் யோசனை கூறுங்கள்!

எம். கே. இசக்கி,
திருநெல்வேலி டவுன்.

கவனிக்க வேண்டும்!

"நிரபராதி" தமிழ்ப் படத்தை நான் பங்களூரில் பார்த்தேன். அதில் சந்திரய்யாவாக நடிக்கும் பிரபாகர ராவ் ஒரு இடத்தில், "மதராஸ் வேலையைக் காண்பித்துவிட்டாயே" என்று கூறுகிறார். இதைக் கேட்டவுடன் தியேட்டரில் இருந்த அத்தனை பங்களூர் வாசிகளும் விடாமல் சிரித்தனர். ஏற்கனவே, தென்னிந்தியாவில் பல ஊர்களில் சென்னை மக்களைப் பற்றிக் கேவலமாக நினைக்கின்றனர். இப்படத்தைப் பார்த்தவுடன், அவர்கள் தங்கள் அபிப்பிராயத்தை ஊர்ஜிதம் செய்துகொள்ள நேரிடுகிறது. ஆகையினால் இம்மாதிரியான கட்டங்களை சென்ஸார் போர்டார் கவனித்து படம் வெளிவரும் முன்பே வெட்டிவிட வேண்டும். இந்தப் படத்தைத் தயாரித்த எச். எம். ரெட்டி, தாம் ஒரு சென்னைவாசி என்பதை மறந்து விட்டார் போல் இருக்கிறது. இவ்வளவு நல்ல படத்தைத் தயாரித்துள்ள அவர் இம்மாதிரியான காட்சிகளைச் சேர்க்காமல் இருந்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்.

டபிள்யூ. ஸி. திருவேங்கடம்,
சென்னை—17.

சினிமாவும் சேவா சங்கமும்

கலையின் வளர்ச்சிக்கு சினிமாப் பத்திரிகைகளால் எவ்வளவுதான் சேவை செய்யமுடியும்? 'செவிடன் காதில் ஊதிய சங்கு போல' படத் தயாரிப்பாளர்கள் அவற்றை அசட்டை செய்து, காமக் கூத்துகளுக்கு வாய்ப்பு அளிக்கின்றனர். வருங்கால இந்தியாவை ஆளப்பிறந்த சிறுவர்கள் அறிவை பாதிக்கச் செய்யும் பாதகம் செய்யும் படமுதலாளிகளை ரஸிகர்களே தண்டிக்கவேண்டும். எப்படித் தண்டிப்பது? ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு தெருவிலும் 'சினிமா சேவா சங்கம்' என்ற ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். பல கூட்டங்கள் கூட்டி, தீர்மானங்களை நிறைவேற்றி, நாட்டிற்கு எத்தகைய படங்கள் தேவை என்பதை அந்தந்தப் படமுதலாளிகளுக்கும்,

*பரிசு பெற்ற கடிதம் :—எம். கே. இசக்கி, தெற்குப் புதுத் தெரு, திருநெல்வேலி டௌன்.

சினிமாப் பத்திரிகையாளருக்கும் அறிக்கை அனுப்பவேண்டும். மக்களது கொதிப்பை அப்படியே பிரசுரிக்க சினிமாப் பத்திரிகைகள் தயங்காவிடில் நிச்சயம் சினிமா சேவாசங்கத்தால் பட உலகிற்கு விமோசனமும், படமுதலாளிகளின் அறியாமைத் திரை விலக்கமும், சென்ஸார் போர்டாரின் கண் திறப்பும் ஏற்படும்.

ஆர். தங்கவேலன்,
திருச்சி.

தவறான பிரசாரம்தான்!

தங்கள் மே மாத இதழில், "உள்ளது உள்ளபடி" பகுதியில் 'தவறான பிரசாரம்?' என்பதைப் படித்துப் பார்த்தேன். அது முற்றிலும் உண்மையேதான். ஆஸ்திகம் அழிந்து, நாஸ்திகம் ஓங்கி வரும் இக்காலத்தில் சர்க்கார் இம்மாதிரி செய்திப் படங்களைத் திரையிட்டு வருவது ஆச்சரியமாகத்தானிருக்கிறது. இப்படம், "கடவுள் பேரில் மக்கள் வைத்திருக்கும் பக்தி முட்டாள்தனமானது; இனிமேலாவது அதை ஒழித்துவிடவேண்டும்" என்று சர்க்காரே பிரசாரம் செய்வதுபோலிருக்கிறது! நாஸ்திகப் பிரசாரம் உச்சஸ்தானத்தைஅடைந்திருக்கும் இந்நாட்களில், அரசாங்கத்துக்குஎதிர்ப்பு இருக்கும் தற்பொழுதைய நிலையில் இம்மாதிரியான செய்திப் படங்கள் வெளிவருவது மிகவும் வருந்தத்தக்க விஷயமே. இனிமேலாவது சர்க்கார் இம்மாதிரியான செய்திப் படங்களைத் தயாரித்துத் திரையிடமாட்டார்களென நம்புகிறேன்.

ஏ. எம். மருதமுத்து,
அந்தியூர்.

ஆச்சரியம்தான்!

தற்சமயம் தமிழ் நாட்டின் பல இடங்களில் ஓடிக் கொண்டிருக்கும் "தேவகி" படத்தைப் பார்த்தபோது, ஈஸ்வர்லால், மாதுரி, மோதிலால், குர்ஷித் முதலியோர் நடித்த ரஞ்சித் மூவிடோனின் "ஷாதி" என்ற ஹிந்திப் படம்தான் என் நினைவுக்கு வந்தது. "ஷாதி" என்ற ஹிந்திப் படத்தின் பெரும் பகுதியான காட்சிகள் "தேவகி"யில் இடம் பெற்றிருக்கின்றன. ஒரு கதையின் கருத்து ஏக காலத்திலோ அல்லது முன் பின்பாகவோ வெவ்வேறான கதாசிரியர்களுக்கு உதிக்கலாம். ஆனால் எழுதும் கதையில்—ஸ்குரு லூஸ் பேர்வழியான செக்ரட்டரி, முதலாளியின் மகள் 'குதிரை வேண்டும்' எனக் கேட்டதற்கு கழுதையைக் கொண்டு வந்து நிறுத்தும்படியான அளவுக்கு—இரு கதாசிரியர்களின் கற்பனையும் ஒன்று போல் ஓடுகின்றது என்றால் ஆச்சரியம் தான்! "ஷாதி"யையும், "தேவகி"யையும் பார்த்த ரஸிகர்கள், "என்ன ஆச்சரியம்! இரண்டும் ஒரே கதையாக இருக்கின்றதே!" என வியப்படைகின்றனர். ஹிந்திக் கதையைத் தழுவியது என ஒரு வார்த்தை சொல்ல மு. கருணாநிதி மறந்து விட்டாரோ என்னவோ! இனியாவது தழுவல் கதைகள் எழுதினால் உள்ளதைச் சொல்லிவிட்டு எழுதுவார் என எதிர்பார்க்கிறேன்.

"பக்தன்"
வேப்பேரி—சென்னை.

சர்க்கார் கவனிக்குமா?

எங்கள் ஊரில் "ஸ்ரீ முருகன் டாக்கீஸ்" என்ற தியேட்டர் கட்டி மூன்று வருஷங்கள் ஆகிவிட்டன. இந்த மூன்று வருஷங்களும் படம் ஓடிக் கொண்டுதான் இருந்தது. தியேட்டர் ஆரம்பமாவதற்கு முன் இஞ்சினியர் இந்த தியேட்டரை வந்து பார்த்துவிட்டுத்தான் "லைசென்ஸ்" கொடுத்தாராம். சில மாதங்களுக்குமுன் அதே இஞ்சினியர் தியேட்டருக்கு வந்தார். "இந்தத் தியேட்டரின் அஸ்திவாரம் சரியில்லை. இதை இடித்துவிட்டு அஸ்திவாரம் வேறு போடவேண்டும்" என்று கூறி லைசென்ஸை ரத்து செய்துவிட்டுப் போய்விட்டாராம். தியேட்டரை ஒரு லக்ஷம் ஒன்றரை லக்ஷம் போட்டுக் கட்டிவிட்டு, இப்போது தியேட்டரை இடிப்பதா? ஏன் முன்னமேயே வந்து பார்த்து 'தகுதியானது' என்று கூறி லைசென்ஸ் அளித்த இஞ்சினியருக்கு இப்போது என்ன வந்தது—அஸ்திவாரம் சரியில்லை என்பதற்கு? இதுதான் சர்க்காரின் நீதியோ? இப்போது தியேட்டர் மூடப்பட்டு 4 மாதங்கள் ஆகிறது. இதை சர்க்கார் உடனே நேரில் வந்து பார்த்து விட்டுப் போகும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

பி. இராமநாதன்,
மண்ணச்சநல்லூர்.

ஒத்துழையுங்கள்!

சினிமாக் கொட்டகைகள் சம்பந்தமான சர்க்காரின் உத்தரவுகளை வெளி

யூர்களில் பலர் சட்டை செய்வதில்லை. "லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கக் கூடாது" என்ற போர்டுகள் பக்கத்துக்குப் பக்கம் தொங்குகின்றன. நமது சகோதரர்களில் பலர் அதற்கு மதிப்புக் கொடுப்பதேயில்லை. கொட்டகை முதலாளிகளும் அதைத் தீவிரமாக அமுல் செய்ய முற்படுவதில்லை. புகைபிடிப்பவர்கள் இனியேனும், தமது சகோதர சகோதரிகளின் நன்மையை உத்தேசித்து, 'படம் பார்க்கும்போது புகைபிடிப்பதில்லை' என்ற தீர்மானத்துடன் சட்டத்துக்கு மதிப்புக் கொடுத்து ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

கி. பத்மநாபன்.

கவனிக்குமா ?

திடீரென்று சென்னைக்கு வந்தேன். வேலையை முடித்துவிட்டு, சிறிது பொழுது போக்காக சினிமாவுக்குச் செல்லலாம் என்று நினைத்தேன். அதன்படி கிரௌன் டாக்கீஸுக்குச் சென்றேன். கஷ்டத்துடன் 'க்யூ'வில் நின்று பத்தணா டிக்கெட் வாங்கி தியேட்டருக்குள்ளே சென்று நாற்காலியில் அமர்ந்தேன். திடீரென்று என் வயிற்றை அமுக்குவது போலிருந்தது. என்னவென்று பார்த்தால், ஒரு வரிசையிலுள்ள நாற்காலிக்கும் மற்றொரு வரிசையிலுள்ள நாற்காலிக்கும் இடையில் ஆறு அங்குல தூரங்கூட இல்லை. எதிரிலிருக்கும் நாற்காலி நம் வயிற்றை அமுக்குகின்றது. சிறிது அதிகம் சாப்பிட்டுவிட்டு தியேட்டருக்குப் போனால் அங்கேயே ஜீரணம் ஆகிவிடும்போல் இருந்தது. என்னால் அந்த நிலையைச் சமாளிக்க முடியவில்லை. இடைவேளையில் வீட்டுக்கு கிளம்பிவிட்டேன். பொழுது போக்கிற்காக ஏற்பட்ட இடத்தில் கஷ்டம் கொடுக்கிறார்கள்! சென்ற எட்டு ஆண்டுகளாக எத்தனையோ தியேட்டர்களுக்குப் போயிருக்கிறேன்; ஆனால் இதுபோல் இல்லை. இதை சர்க்கார் கவனித்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்குமா ?

எ. எ. முஹம்மத் பாஷா,
சென்னை.

இம்முறை மாறவேண்டும் !

இன்றைய உலகிலே ஏற்றமுடன் விளங்குவது சினிமாக் கலைதான் என்றால், அது மிகையாகாது. ஆனாலும் ஒரு சில பகுதிகளை வகுத்துப் பார்க்கின், கலைக்களம் சிறிது கொலைக்களமாக மாறிவிடுகின்றது. ஏதாவது இரண்டொரு நடனம், இரண்டு பாட்டுக்கள், கன்னாபின்னாவென்று பின்னணி இசை, கக்ஷிப்பிரசார வசனங்கள்—இவைகள் இருந்தால் மட்டும் ஒரு படம் அருமையான படமாக மதிக்கப்பட மாட்டாது. மக்களின் மனதைச் சிறிதளவாவது கவரும் வண்ணம்—மதியை வளர்க்கும் வண்ணம்—மாண்புற அமைந்திருக்க வேண்டும். கண்ட இடங்களில் கண்ட காட்சிகளையும்—அதாவது அந்தந்த இடத்துக்குப் பொருத்தமில்லாத காட்சிகளையும்—நகைச் சுவைகளையும் புகுத்துவதால் படத்தின் தரம் குறைவதோடு மட்டுமல்லாது, கதாசிரியர்களின் பெயரும், கற்பனையும் பாழடைய ஏதுவாயிருக்கின்றது. இத்தகைய குறைகள் நம் படங்களில் நிறைய உள்ளன. இவைகள் நீக்கப்பட்டால் படவுலகம் இன்னும் எழுச்சியுறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

பழ. விவேகானந்தன்,
ஆவினிப்பட்டி.

குற்றவாளி

[18-ம் பக்கத் தொடர்ச்சி]

"வேறு வேலை எதுவுமே கிடைக்காமற் போகவேதான் நான் இந்த வேலைக்கு வர நேர்ந்தது."

மாஜிஸ்டிரேட் சங்கிலியைக் கையில் வைத்துக்கொண்டு, "நீ அவர் குழந்தையின் கழுத்திலிருந்த சங்கிலியைத் திருடிவிட்டதாக அவர் சொல்லுகிருரே! இது நிஜம்தானு?" என்று ஒரு கேள்வியைக் கேட்டு விட்டு, ஒரு பெருமூச்சுடன் தமது ஆசனத்தில் சாய்ந்தார். ஜனங்கள் கவனம் குற்றவாளியின் பக்கம் திரும்பியது.

குற்றவாளியிடமிருந்து "இல்லை" என்று சுருக்கமாக ஒரே வார்த்தையில் பதில் கிடைத்தது. மாஜிஸ்டிரேட் சிறிது நிமிர்ந்து உட்கார்ந்தார். குற்றவாளியை ஆச்சரியத்துடன் நோக்கிய அவரது கண்களில் கேள்விக் குறியும் தென்பட்டது. அதைப் புரிந்து கொண்டவள் போல், அந்த யுவதி, "ஏனென்ருல், அது என்னுடைய சங்கிலிதான்" என்று விடையளித்தாள். கூடியிருந்த ஜனங்களிடையே சிறிது சலன மேற்பட்டது. அண்ணுமலையின் வாயினின்றும் தெளிவற்றதோர் இகழ்ச்சிக் குறிப்பு வெளிப்பட்டது. அதைக் கவனித்த அந்த இளம் பெண், "இந்தச் சங்கிலி என்னுடையது தான். என் தாய் இறந்து போகும் போது, என் தந்தையின் ஞாபகார்த்தமாக இதை அணிந்து கொள்ளும் படியாகக் கூறி என்னிடம் ஒப்புவித்து விட்டுச் சென்ருள்" என்று ஆணித்தரமாகப் பதிலளித்தாள்.

"நீ, அவர் வீட்டிலிருந்து இரவில் எங்கோ ஓடிப் போனதையாவது நிஜமென்று ஒப்புக் கொள்ளுகிருயா?" என்று தன் கடைசி அஸ்திரத்தை எறிந்தார் மாஜிஸ்டிரேட்.

வானின் முழுமதியை கருமேகம் மறைத்தது போல் அவளது முகம் சற்றே ஒளியிழந்து இருண்டது. அவள் இதழ்கள் இலேசாகத் துடித்தன. அண்ணுமலையின் பக்கம் ஒரு தரம் அளவு கடந்த வெறுப்புடன் உற்று நோக்கி விட்டு, நீண்ட பெருமூச்சுடன் ஆழ்ந்த குரலில், கூடிய வரை தன் உணர்ச்சியை அடக்கிய வண்ணம், அவள் திடமான குரலில்,

"இரவில் நான் இவர் வீட்டை விட்டு ஓடிப்போனதென்னவோ வாஸ்தவம் தான். ஆனுல், ஓடிப் போனதற்குக் காரணம் வேறு" என்று கூறிச் சற்றே தயங்கினுள். கோர்ட்டில் ஊசி போட்டால் சப்தம் கேட்கும்; அவ்வளவு நிசப்தம். கோர்ட்டார் விவரமாகத் தொடர்ந்து கூற அனுமதிக்கவே, அவள் மேலும் கூறலானுள்:—

"யாருமற்ற அனுதையாக இருந்த என்னை இவர்தான் தகுந்த சமயத்தில் ஆதரித்துக் காக்க முன் வந்தார். இவர் ரொம்பவும் பெரிய மனிதர்; ஆகையால் இவரிடம் உயர்ந்த பண்பு இருக்கும் என்று நான் நினைத்து, இவரைப் பரிபூரணமாக நம்பினேன். இவர் முதலில் கொஞ்ச நாட்கள் என்னை ரொம்பவும் கௌரவத்துடன் "தங்கச்சி, தங்கச்சி" என்றே அழைத்து வந்தார். என்னை ஓர் அனுதைப் பெண் என்றே கருதாது தம் உறவினரில் ஒருத்தியைப் போலவே நடத்தி வந்தார். வந்த புதிதில் என்னிடம் 'என் மனைவி மகா சந்தேகப் பிராணி. ஆகையால், அவளைக் கொஞ்சம் காக்காய் பிடித்து வைத்துக் கொள்' என்று கூறியிருந்தார். ஆனுல், நாளடைவில், அவள் அவ்வளவு பொல்லாதவள் ஒன்றும் இல்லை என்று நானே அவளுடன் பழகிய பின் தெரிந்து கொண்டேன். இவருடைய மனைவிக்கு என்னிடம் ரொம்பவும் பிரியம். இவர் தாமெழுதிய கதைப் புத்தகங்களை என்னிடம் கொடுத்துப் படித்துப் பார்க்கச் சொல்லுவார். பிறகு, என்னுடைய அபிப்ராயத்தைக் கேட்டு அறிந்து கொள்வார். ஒரு நாள், 'நீதான் படித்த பெண்ணுக இருக்கிருயே. இந்த மூன்று கழுதைகளையும்—(அவருடைய முதல் இரண்டு பையன்களையும், கடைசியாக உள்ள பெண்ணையும்) வேறு யாராவது மேய்க்கட்டும். நீ என் வேலையைக் கொஞ்சம் பார்த்துக் கொள்' என்ருர். நானும் ஏதோ என்னுல் முடிந்தவரையில் இவருடைய தொழிலில் கொஞ்சம் உதவியாக இருந்து வந்தேன். ஒரு முறை இவருடைய குடும்பத்துடன் என்னையும் அழைத்துக் கொண்டு மகாபலிபுரம் போயிருந்தார். அங்கே, ஏகாந்தமான

ஓரிடத்தில் நான் சிந்தனையில் மூழ்கிய வண்ணம் அமர்ந்திருந்தேன். இவர் என் பின் புறத்தில் வெகு நேரம் நின்று கொண்டிருந்தார் போலிருக்கிறது. 'ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்!' என்று கேட்டார். ஒன்றுமில்லை. இந்த உலகத்தில் யாருக்காவது, யாராவது இருக்கிறார்கள். எனக்குத்தான் யாருமே இல்லை. நான் மட்டும்தான் எப்பொழுதுமே தனி". என்று கூறி வருத்தப்பட்டேன்.

"'ஏன்; நானிருக்கிறேனே' என்று கூறி விஷமமாகப் புன்னகை புரிந்தார். பிறகு, 'உன்னைச் சினிமாவில் பிடித்துப் போடலாமென்றிருக்கிறேன். உனக்கு சினிமாவில் நடிப்பதற்கு இஷ்டந்தானே?' என்று கேட்டார்.

"இவர் பல பெண்களைத் தம் செல்வாக்கினால் சினிமாவில் சேர்த்திருப்பதை நான் அறிந்திருந்தேன். 'ஓ, எனக்கு ரொம்பவும் இஷ்டம். ஆனால், என்னைச் சினிமாவில் சேர்த்துக் கொள்ளுவார்களா?' என்று நான் கேட்டேன்.

"'அதில் என்ன சந்தேகம்! இனிய குரலுடைய, அழகிய, படித்த இளம் பெண்ணொருத்தி சினிமாவில் நடிக்க முன்வந்தால், அது பட உலகத்திற்கே கௌரவமல்லவா! ஏன் தயங்குகிறாய்? நான் மனது வைத்தால் எதுவும் நடக்கும். சரி, கொஞ்ச நேரம் நாமிருவரும் கைகோத்துக் கொண்டு கடற்கரை ஓரமாக உலவி வரலாம், வா' என்றார்.

"எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நான் அப்படியே திகைத்துப் போய் நின்றுவிட்டேன். 'இதற்கா இப்படிப் பிரமித்துப் போய் நிற்கிறாய்? என்னவோ சினிமாவில் நடிக்கப் போகிறேன் என்கிறாய். நீ எவ்வளவோ படித்திருக்கிறாய். அமெரிக்கா, இங்கிலாந்து

அந்த செடிகளே சாட்சியாய் கூறலாம இவ் விருவருககு மிடையே காதல்தான் ஆரம்பமாகி யிருக்கிறது என்று! "சுகிர்த்" (மலையாளம்), "நண்பன்" (தமிழ்) ஆகிய படங்களில் நடிக்கும் மாஸ்டர் சங்கரும், குமாரி லக்ஷ்மிதேவியும்.

முதலிய தேசங்களில் எல்லாம், ஆண்கள் பெண்கள் எல்லோரும் ஒருவரோடொருவர் எவ்வளவு சகஜமாகப் பழகுகிறார்கள்!' என்று கடைசியாக ஒரு கேள்வியைப் போட்டார்.

"பதிலுக்கு நான், 'நாம் அமெரிக்காவிலோ, இங்கிலாந்திலோ பிறக்கவில்லையே!' என்றேன் தைரியமாக.

"'எந்த தேசத்தவராயிருந்த போதிலும், உயர்ந்த பண்பு அல்லது குணமிருப்பின் அதைப் பின்பற்றுவதில் ஆட்சேபணை யென்ன?' என்றார். எனக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. இதற்குள் நேரமாகிவிடவே, நாங்கள் கிளம்பி வந்து விட்டோம். அன்றிலிருந்து வீட்டில் இவர் அதிகம் தங்குவதே கிடையாது. வீட்டிலிருக்கும் போதெல்லாம் ஏதோ பிரமை பிடித்தவர் போலி

134153

ருப்பார். இரவு வெகு நேரம் கழித்துத் தான் திரும்பி வருவார். மனைவி கேட்டால், 'சிநேகிதன் வீட்டில் சாப்பிட்டு விட்டு, அங்கேயே படுத்துத் தூங்கி விட்டு வந்தேன்' என்பார். என்னிடம் மட்டும், 'நான் நேற்று வுட்லண்ட்ஸில் தங்கிவிட்டுவந்தேன். போனவாரம் ஒரு நாள், நானும் நாட்டியமணி......யும், ஒரு நல்ல சினிமாவுக்குப் போய்விட்டு வந்தோம்' என்றெல்லாம் சொல்லுவார். அப்பொழுதும், என் மனதில் இவரைப் பற்றித் தவருன அபிப்பிராயமே உண்டாகவில்லை.

''பல நாட்களுக்குப் பிறகு,மறுபடியும் எனக்குத் தொந்தரவு வந்துவிட்டது. அதாவது, இவரிடமிருந்து எனக்கு ஒரு நீண்ட காதல் கடிதம் வந்திருந்தது. தான் என்னை வெகு சிரமப்பட்டு மறக்க முயன்றும், என்னை மறக்கத் தன்னால் இயலவில்லை யென்றும், காதல் என்பது இரண்டு ஆத்மாக்கள் ஒன்றுபடுவதென்றும், இன்னும் பல விஷயங்களையும் எழுதி, அந்தக் கடிதத்திற்குப் பதில் கிடைக்காத பட்சத்தில் தான் சிங்கப்பூர் பக்கம் பிரயாணம் கிளம்புவதாகத் திட்டம் போட்டிருப்பதாகவும் தெரிவித்திருந்தார். என் நிலைமை இருதலைக் கொள்ளி எறும்பின் நிலைபோல் ஆகிவிட்டது. கடிதம் வழியில் எங்கோ, யார் கையிலோ சிக்கி விட்டது என்று நினைத்துக் கொள்ளட்டுமே என்ற உத்தேசத்துடன், நான் கடிதம் என் கையில் வந்து சேர்ந்ததே தெரியாததுபோல இருந்துவிட்டேன். அதற்குப் பிறகுதான் இவருக்கு என்னிடம் பகைமை உணர்ச்சி ஆரம்பமாயிற்று.

''ஒருநாள் மாலை. 'இவரைத்தவிர வீட்டிலுள்ள மற்ற எல்லோரும் எங்கேயோ வெளியே போயிருந்தார்கள். அப்பொழுது இவர் என்னைத் தம் அறைக்கு வரும்படி கூறினர். நான் பயந்து கொண்டே இவர் அறைக்குச் சென்றேன். இவர் என்னைப் பார்த்து, 'கண்ணம்மா, இங்கே உட்கார்' என்று தன் பக்கத்திலிருந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டினர். நான் பேசாமலிருந்தேன். 'பரவாயில்லை, பக்கத்தில் உட்கார்ந்து பேசுவதால் தவறொன்றுமில்லை' என்ருர். நான் .பதில் பேசாது இவர் காட்டிய நாற்காலியில் உட்கார்ந்தேன்.

''நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறுவாயா?' என்று கேட்டார்.

'''சரி' என்று மெதுவாகப் பதிலளித்தேன்.

''என்னைக் கண்டால் உனக்குப் பிடிக்கிறதோ?'

'''உம்' என்று நான் தலையசைத்தேன்.

''என் கதைகள்?'

'''ரொம்பப் பிடிக்கும்.'

'''என் பேச்சு.'

'''உங்கள்பேச்சும், உங்கள் எழுத்தைப் போலவே அழகாகத்தான் இருக்கிறது.'

'''அப்படியானல், என்னிடம் உனக்கு வெறுப்பொன்றுமில்லையே?'

'''வெறுப்பா? ஒருபொழுதுமில்லையே!''

'''அப்படியானல், நான் போட்ட கடிதத்திற்கு நீ ஏன் பதிலே போடவில்லை?'

'''நான் தலை குனிந்த வண்ணம் மௌனமாயிருந்தேன்.

'''இதோ பார், கண்ணம்மா, உனக்கு உண்மையாகவே என்னிடம் பிரியம் இருக்கிறது. ஆனல், நாலுபேர் நாலு சொல்லுவார்களே என்று தானே நீ அஞ்சுகிருய், இல்லையா? என்ன அப்படித்தானே?' என்ருர்.

'''உங்களிடம் பிரியம் இருப்பதென்னவோ வாஸ்தவந்தான். ஆனல், காதல் என்று என்னவோ சொல்லுகிறீர்களே அந்த மாதிரியான பிரியம் அல்ல நான் குறிப்பிடுவது' என்றேன்.

'''இது என்ன மூட்டாள்தனம், அமெரிக்காவில், இங்கிலாந்தில்... என்று அவர் முடிப்பதற்குள் நான் குறுக்கிட்டு, ஆத்திரத்தில் 'போதும், நிறுத்துங்கள்' என்று இரைந்தேன்.

''இவருக்கு மிகுந்த ஆச்சரியம்உண்டாயிற்று. அது உடனேயே எரிச்சலாக மாறியது. 'கண்ணம்மா, இத்தனை நாட்கள் யார் உன்னை ஆதரித்தது என்பதை யோசித்துப் பார்' என்று உரத்த குரலில் கூறினர்.

'''தாங்கள்தான் என்பதை நான் மறுக்கவில்லையே. அதனல்தான் தாங்கள் இடும் பணிகளை யெல்லாம் அன்புடன் செய்து வருகிறேன்' என்று பணிவுடன் கூறினேன்.

"'நான் அன்று உன்னைக் காப்பாற்றியிராவிடில் உன் கதி என்ன ஆகியிருக்கும்?' என்று கேட்டார்.

'தாங்கள் செய்த பேருதவியை நான் என்றும் மறவேன். ஆனால், அதற்காக என் மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்க நான் விரும்பவில்லை' என்று உறுதியுடன், தீர்மானமாக, அவர் மண்டையிலடிப்பது போல் கூறினேன். அதற்குமேல் இவர் ஒன்றும் கூறத் தோன்றாமல் விழித்தார். சில நிமிஷ மௌனத்திற்குப் பின், 'கடைசியாக ஒரு சின்ன சமாசாரம்' என்ற பீடிகையுடன் ஆரம்பித்து, 'இந்த ஊரில் எனக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்று நீ அறிய மாட்டாய். நீ கழுத்தில் அணிந்திருக்கும் தங்கச் சங்கிலி, நீ என் குழந்தைகள் கழுத்திலிருந்து திருடியது என்று நான் கூறுகிறேன் என்று வைத்துக்கொள்...' என்று அவர் வாக்கியத்தை முடிப்பதற்குள், நான் 'ஐயையோ! இது என் தாயார் தன் ஞாபகார்த்தமாக என்னிடம் கொடுத்ததாயிற்றே' என்றேன்.

"'நீ கூறுவதை நான் நம்புகிறேன். ஆனால் பொது ஜனங்கள் நம்பவேண்டுமே' என்று கூறிவிட்டுப் பேய்ச் சிரிப்புச் சிரித்தார்.

"அன்றிரவே. 'உடும்பு வேண்டாம், கையை விட்டால் போதும்' என்று அங்கிருந்து கிளம்பி கால் போன வழியே நடந்து சென்றேன். பிறகு, நடந்தவை கோர்ட்டாரவர்களுக்கே தெரியும்" என்று கூறிவிட்டு நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

குற்றவாளியின் சரிதத்தைக் கேட்டவுடனே, கோர்ட்டில் நீண்ட நேரம் விவரிக்க இயலாததோர் அமைதி நிலவியது. கோர்ட்டில் குழுமியிருந்த ஜனங்களில் யாருக்கும், குற்றவாளி கூறியதில் எதுவுமே கற்பித்துக் கூறப்பட்டதாகத் தோன்றவில்லை. எல்லோரும் குற்றம் சாட்டப்பட்ட இளம் பெண் விடுதலையடைய வேண்டும் என்று மனப்பூர்வமாக வேண்டிக் கொண்டார்கள். ஆனால், சங்கிலி அவளுடைய தாயிருந்தும், அது அவள் சங்கிலிதான் என்பதற்கு அவள் வாய்ச் சொல்லைத் தவிர வேறு சாட்சி இல்லையே! அதை நினைத்து எல்

விற்பனையாகிறது

வரலட்சுமியின் வாழ்க்கை

இவர் எப்படி சினிமா நட்சத்திரமானார்? இவர் வாழ்க்கையில் இதுவரை நடந்திருப்பதென்ன? என்பதைப் படித்துப் பாருங்கள். பல படங்களுடன் மூவர்ண வார்னிஷ் அட்டை.

விலை 8 அணா

தபாலில் பெற விரும்புவோர் 9 அணா ஸ்டாம்பு அனுப்பவும். 25% கமிஷன் கழித்து முன் பணம் அனுப்பும் வியாபாரிகளுக்கே புத்தகம் அனுப்பப்படும்.

படித்தீர்களா? எம். வி. ராஜம்மா தான் நட்சத்திரமான கதையை தானே வெகு சுவாரஸ்யமாக சொல்கிறார். விலை 8 அணா.

காதல் பலி ஓர் உயர்ந்த காதல்கதை. விலை 8 அணா.

விவரங்களுக்கு:— டம் டம் பதிப்பகம்

த. பெ. நெ. 1236. சென்னை-1.

இலங்கை ஏஜண்ட்: மோகன் அன் கோ. லிமிடெட், கொழும்பு.

எம். எஸ். பிக்சர்ஸார் வெளியிட்டிருக்கும் "மோஹன சுந்தரம்" தமிழ்ப் படத்தில் பி. ஆர். பந்துலுவும், டி. கே. ராமச்சந்திரனும் தோன்றும் ஒரு 'நெருக்கடியான' கட்டம்.

லோரும் தங்கள் மண்டையைப் போட்டு குழப்பிக் கொண்டார்கள். இதற்குள், அண்ணாமலை எழுந்து நின்று, "யுவர் ஆனர்! சாட்சியமற்ற இந்தப் பெண்ணின் வாக்குமூலத்தை நீங்கள் நம்புகிறீர்களா!" என்று கேட்டார்.

குற்றவாளிக் கூண்டில் நின்று கொண்டிருந்த இளம்பெண் அவரை எரித்துவிடுபவள்போலப் பார்த்தாள். அவளுடைய இரு கரிய விழிகள் இரண்டு நட்சத்திரங்களைப் போல் ஒளிர்த்தன. "மிஸ்டர் அண்ணாமலை! நீங்கள் இவ்வளவு கீழ்த்தரமான மனப்பான்மையை உடைய, மிகக் கேவலமான குணமுடைய மோசமான ஆசாமி என்று நான் கனவிலும் கருதவில்லை" என்று கத்தினாள். அவளது கண் இதழ்கள் இலேசாகக் குவிந்தன. அடுத்த கணம் அவ்விளம் பாவை மூர்ச்சையானாள்.

உடனே கோர்ட்டில் ஒரே பரபரப்பு உண்டாயிற்று. தண்ணீரை முகத்தில் தெளித்து, மூர்ச்சை தெளிவிக்க ஓடினார்கள் சிலர். ஒரே நிமிஷத்தில் அங்கு சந்தை இரைச்சலுக்கு மேலாகிவிட்டது. "வாட் இஸ் ஆல் திஸ்?" (இதெல்லாம் என்ன?) என்று மாஜிஸ்டிரேட் மேஜையைப் பலமாக இரண்டுதரம் தட்டியும், ஆரவாரம் அடங்கவில்லை. கோர்ட் ஆர்டர்லி "ஸைலென்ஸ்!" என்று தன் தொண்டை கிழியக் கத்தினான். நிலைமை மோசமாகிக் கொண்டு வருவதைக் கண்ட மாஜிஸ்டிரேட் "கேஸ் அடுத்த வாரம், புதன்கிழமைக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது" என்று அறிவித்துவிட்டு, உள்ளே எழுந்து சென்றார். கட்டுக்கடங்காது கொந்தளித்துக் கொண்டிருந்த ஜனசமுத்திரம் கோர்ட்டுக் காம்பௌண்டில் அலை பாய்ந்தது.

• • •

அன்று தீர்ப்புக் கூறும் தினம். ஒவ்வொருவர் முகத்திலும் பரபரப்புத் தென்பட்டது. தீர்ப்பு எப்படியிருக்கும் என்று யாருக்குத் தெரியும்! "சட்டம் மதில் மேல் பூனை; எந்தப் பக்கம் தாவுகிறதோ?" என்று ஜனங்கள் மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள், கண்ணம்மா விடுதலை அடையவேண்டுமென்று அவர்கள் விரும்பினர்.

வழக்கு விசாரணை ஆரம்பமாயிற்று. மாஜிஸ்டிரேட் கண்ணன் குற்றவாளியைப் பார்த்துக் கேட்ட முதல் கேள்வி இதுதான் :—

"அந்தச் சங்கிலி உன்னுடையது என்பதற்குச் சாட்சி இருக்கிறதா!"

"அந்தச் சங்கிலி என்னுடையது என்பதற்குச் சாட்சி அந்தச் சங்கிலியேதான்."

இளம் பெண்ணின் வாயினின்றும் உதிர்ந்த இந்த பதிலைக் கேட்டதும், கோர்ட்டிலிருந்த யாவரும் ஒன்றும் புரியாது ஒருவரை யொருவர் பார்த்து விழித்தனர்.

மாஜிஸ்டிரேட்டின் ஆவல் அதிகரித்தது. "பதிலைக் கொஞ்சம் புரியும்படி விளக்கமாகக் கூறவேண்டும்" என்றார் கடுமை கலந்த அதிகாரக் குரலில்.

"சங்கிலியை என் கையில் கொடுங்கள். நான் விஷயத்தை விளக்குகிறேன்" என்றாள் அப்பாவை.

சங்கிலி அப்பெண்ணிடம் கொடுக்கப்பட்டது. அது ஒரு இரட்டை வடச் சங்கிலி. சங்கிலியின் நடுவே இதய உருவில் 'லாக்கெட்' ஒன்று தொங்கியது. அது பார்ப்பதற்குக் கனமாகத் தோன்றினாலும், அப்பெண் அதை ஓர் இடத்தில்

லேசாக அழுத்தியவுடனே அது இரண்டாகத் திறந்து கொண்டது. "இதைப் பாருங்கள்" என்று கூறி அதை மாஜிஸ்டிரேட்டிடம் சேர்ப்பித்து விட்டு, "இதுதான் என் தரப்பிலுள்ள ஒரே சாட்சி. நடுவிலுள்ள போட்டோ என் தந்தையின் போட்டோ" என்று கூறினாள்.

'லாக்கெட்' டைக் கையிலெடுத்துப் பார்த்த மாஜிஸ்டிரேட்டின் கண்கள் ஒருமுறை சாட்சிக் கூண்டில் நின்று கொண்டிருந்த பாவையை நோக்கின. 'லாக்கெட்'டில் இருந்தது இருபத்தைந்து வயதுடைய காளை ஒருவனின் போட்டோ. அவருடைய சிந்தனை, வாழ்க்கையின் கடந்து போன பாதையில் சிறிது பின்னோக்கிச் சென்று, கல்லூரி நாட்களை ஞாபகப்படுத்தின.

* * *

அது, இருபது வருஷங்களுக்கு முன்பு நடந்த விஷயம். அப்பொழுது கண்ணன் இருபத்தைந்து வயதுக் கட்டழகன். அவன் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சமயம் அது. ஹாஸ்டல் வசதியாக இல்லாததால், அவனும் அவனுடைய நண்பர்களும் 'தனிக் குடித்தனம்' நடத்தி வந்தனர். அவர்களுடைய 'மெஸ்'ஸில் வயதான கிழவியொருத்தி மாணவர்களுக்கு சமைத்துப் போட்டுக் கொண்டிருந்தாள். அவளுடைய பெண் வயிற்றுப் பேத்தி ஒருத்தி சிற்சில சமயங்களில் தன் பாட்டிக்கு உதவியாக சுற்றுக் காரியங்கள் செய்ய வருவாள். அவளும் அடிக்கடி சமையல் செய்வதுண்டு. அவள் சமையல் வாய்க்கு ருசியாயிருக்கும். அப்பெண்ணின் கள்ளங் கபடமற்ற முகத்தை முதன் முறை கண்டவுடனேயே தன் உள்ளத்தை அவளிடம் பறிகொடுத்து விட்டான் கண்ணன். மெதுவாக அவளிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்து, அவளிடம் நட்பு முறையில் பழகலானான் கண்ணன். தான் காணுகின்ற காட்சிகளையெல்லாம் அவளிடம் கூறுவான். கல்லூரியிலிருந்து திரும்பி வரும்போது, அவளுக்கென்று

[58-ம் பக்கம் பார்க்க]

நிஜமா!
இரு பாஷைப் படங்களில் நடித்த முதல் குழந்தை நக்ஷத்திரம் பேபி சரோஜாதான்
பொதுஜனங்களின் ஆட்சேபணையால் "தஞ்சாவூர் ரௌடி" படம் "பக்கா ரௌடி" என்று பெயர் மாறியது.
பிரபல தெலுங்கு ஹாஸ்ய நடிகரான சிவராவ் முன்பு சினிமா ஆபரேட்டராக இருந்தார்.
பிடில் சௌடய்யாவும், பாடகர் செம்பை வைத்தாவும் "வாணி" என்ற படத்தில் நடித்துள்ளனர். மு சிரியோ "துக்காராமி"ல் நடித்திருக்கிறார்.
என்.எஸ்.கேயின் "கொழுக்கட்டை" படத்திற்கு எம். ஆர். சுவாமிநாதன் வசனம் எழுதி இருக்கிறார்.
ஸ்ரீராம ஜெயம்
தம் கஷ்டங்கள் விலகுவதற்காக வி. என். ஜானகி தினம் ஒரு பக்கம் "ஸ்ரீராம ஜெயம்" எழுதுகிறார்!
டி. ஆர். ராஜகுமாரி முதல் தடவையாக "அமர கவி"யில் ஆண் வேஷத்தில் தோன்றுவார்
ராஜா சாண்டோ செய்த கிளர்ச்சியின் விளைவாகவே திரையில் நடிக, நடிகைகளின் பெயர்களைக் காட்டும் வழக்கம் ஆரம்பமாயிற்று.
லக்ஷ ரூபாய் செலவில் "பாலயோகினி"யைத் தயாரித்த கே. சுப்ரமண்யம் நூறு ரூபாய் பரிசு ஏற்படுத்தி, பொதுஜனங்களிடமிருந்து தம் கதைக்கு சரியான முடிவைத் தெரிந்து கொண்டார்!
நாராயண ராவ் யானைக்கு அல்வாவும், புலிக்குப் புல்லும் வாங்கிப்போட்ட கணக்கை கனகச்சிதமாய் எழுதிக் காட்டியது, முன்பு கணக்குப் பிள்ளையாய் இருந்த அநுபவத்தாலோ!
நாரதர் ஜி. என். பி.யும் கிருஷ்ணன் எம். ஆர். கிருஷ்ணமூர்த்தியும் "பாமா விஜய"த்தில் சேர்ந்தாற்போல் "ஸ்வரம்" பாடியுள்ளனர்
பகி.

உபயோகமான பூ முதலிய பல சாமான்களை வாங்கி வருவான். இவ்வாறாக பதினெட்டு வயது பாலிகைக் கண்ணன் அன்பிற்கு அடிமையானாள். இரகசியமாக, இருவரும் சந்தித்துப் பேசித் தங்கள் அன்பைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

ஆதரவற்ற சமையற்காரக் கிழவியையும், அவள் பேத்தியையும் இரவு நேரங்களில் அவர்கள் வீடுவரை கண்ணன் கொண்டு போய் விட்டுவிட்டு வருவது வழக்கமாயிருந்தது.

அன்றொரு நாள். அவள் பாட்டி தேக அசௌக்கியமாய் இருந்தமையினால், அவள் மட்டும் தனியே வந்திருந்தாள். வேலைகளெல்லாம் முடிந்தபின் அவளும், அவனும் பாட்டியின் வீட்டை நோக்கி நடக்கலானார்கள். இரவு எட்டு அல்லது ஒன்பது மணியிருக்கும். நிலவு செறிந்த இரவு. தென்றல் 'சிலு சிலு'வென வீசிக் கொண்டிருந்தது. சாலையோரத்து மரங்களினூடே ஊடுருவிப் பாய்ந்து வந்த வெண்ணிலவின் தண்ணொளி மரங்களின் கீழே அவற்றின் நிழல்களோடு கண்ணுமூச்சி விளையாடியது. அத்தகைய இனிய நேரத்தில் அவ்விளங் காதலர்களின் உள்ளங்களில் நெடு நாட்களாகக் கசிந்து கொப்பளித்துக் கொண்டிருந்த காதல் ஊற்று அன்று பெருக்கெடுத்துப் பொங்கலாயிற்று. அந்த இரவு, அவர்களின் இன்ப இரவாக முடிந்தது.

கல்லூரி சாத்தப்பட்டது. இருவரும் பிரியும் சமயம் நெருங்கியது. தன் காதலின் சின்னமாக, அன்று அவளுக்குத் தன் போட்டோ அமைத்த லாக்கெட் உடைய சங்கிலியொன்றை அணிவித்து அவளுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி விட்டு, அன்று இரவு முழுவதும் அவளுடன் கூடியிருந்தான் கண்ணன்.

அதுதான் அவர்களுடைய கடைசிச் சந்திப்பு. அதற்குப் பிறகு, கண்ணன், மேலே படிப்பதற்கு அக்கல்லூரியில் வசதியின்மையால் அக்கல்லூரிக்குப் போகவில்லை. சென்ற கால நிகழ்ச்சிகளை ஓர் இன்பக் கனவென எண்ணி மறந்து விட்டான் வாலிப முறுக்கிலிருந்த அவ்விளங்காளை.

* * *

இவை யாவும் மாஜிஸ்டிரேட் கண்ணன் உள்ளத்தில் இலேசாக நிழலாடின. இரண்டு இரவுகளில் அவர் அநுபவித்த இன்பத்தின் விளைவு இன்று அவர் கண்முன்னே கைதிக் கூண்டில் நின்று கொண்டிருந்தது. கண்ணன் கையிலிருந்த லாக்கெட் நழுவி சிறியதோர் ஒலியுடன் மேஜைமீது விழுந்தது. அந்த சப்தத்தால் தன் சுய உணர்வடைந்து துள்ளி யெழுந்தார் கண்ணன். அவர் உட்கார்ந்திருந்த ஆசனம். "நீ நீதி வழங்கத் தகுதியுடையவனேயல்ல" என்று அவரை இடித்துக் காட்டுவது போல் அவருக்குப் பிரமை உண்டாயிற்று. மெதுவாக அவர் எழுந்து நின்றார். கோர்ட்டில் குழுமியிருந்தவர்கள் முகத்தில் ஈயாடவில்லை. "குற்றம் ருசுவாகவில்லை. வழக்கு தள்ளப்பட்டது" என்று தமது தீர்ப்பைக் கூறிவிட்டு, கண்ணன் உள்ளே போய்விட்டார். பிறகு, கோர்ட்டில் எழுந்த கரகோஷம் அடங்கச் சரியாகப் பத்து நிமிஷங்கள் பிடித்தன.

(ஹிந்திக் கதையொன்றின் கருத்தைத் தழுவியது.)

கர்ப்பத்தடை

நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகும் உணவுப் பஞ்சத்தைத் தடுக்க வழி என்ன?
"குடும்பக் கட்டுப்பாடுதான்!" என்கிறார் நம் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு.

கர்ப்பத்தைத் தடை செய்வதற்கான வழியை பல படங்களுடன் விளக்கியிருக்கிறார், ஸ்ரீ. ஸ்ரீபாத சங்கர். இன்றே ஒரு புத்தகத்தை வாங்கிப் படித்துப் பயன் அடையுங்கள்.

விலை ரு 1. தபால் செலவு தனி.

பிரசுரித்தவர்கள்:

கௌரி நிலையம்
சென்னை—17.

முன்பணம் அனுப்பும் ஏஜெண்டுகளுக்குத் தகுந்த கமிஷன் தரப்படும்.



நடன பத்மினி

நேஷனல் பிக்சர்ஸாரின் தயாரிப்பான
"சிங்காரி" தமிழ்ப் படத்தில் பத்மினி
ஒரு முக்கிய வேஷத்தில் தோன்றுகிறார்.



கிரிஜா

பெல் பிக்சர்ஸாரின் வெளியீடான "ஸ்திரீ ஸாகஸம்" என்ற தமிழ் தெலுங்குப் படங்களில் நடிக்கிறார்.

வாழ்க்கை வர்ணனை

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

உலகம் பூராவிலுமே இந்த ஆட்டத்தில் இரண்டாவது ஸ்தானம் வகிக்கும் நார் வீஜிய செஸ் நிபுணரான ஜே. டோர்ஜால் ஸென்னும் அங்கு விஜயம் செய்திருந் தார். அவருடன் பாலச்சந்தர் சதுரங்கம் ஆடினர். அந்த ஆட்டம் சமஜெயமாக முடிவுற்றது. வட இந்தியாவிலும், இலங்கையிலும் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு சென்னைக்கு வந்தவுடன் பாலசந்தரை "காமதேனு" பட முதல்ாளி அந்தப் படத்தில் நடிப்பதற்கு அமர்த்திக் கொண்டார். இந்தப் படத்தில் அவர் பேபி சரோஜாவின் தோழனுகை நடித்திருக்கிருர்.

16 வயதில் பாலச்சந்தர்

இதற்கு இரண்டு வருஷங்களுக்குப் பிறகு அவரை தமிழ் நாடு டாக்கீஸார் "ரிஸ்ய சிருங்கர்" படத்தில் நடிக்கச் செய்தனர். இப் படத்தில் பாலச்சந்தர், "சரிதானப்பா" என்று அப்பாவுக்கு ஏற்ற பிள்ளையாக நடித்திருப்பதை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அடுத்தபடியாக, அவர் "ஆராய்ச்சி மணி"யில் எஸ். வரலக்ஷ்மியுடன் கதாநாயகனுய் நடித்தார்.

"ரிஸ்ய சிருங்கர்" படத்தில் பாலச்சந்தர் தம் பாட்டின் மெட்டுகளைத் தாமே அமைத்துக் கொண்டதோடு வாத்ய கோஷ்டி ஒத்திகைகளையும் நடத்தினர். "ஆராய்ச்சி மணி"யின் சங்கீத டைரெக்ஷனையும் அவர் ஓரளவு கவனித்திருக்கிருர்.

படங்களில் நடித்தபடியே பாலச்சந்தர் மயிலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூலில் படித்து வந்தார். ஆனல் அவருக்கு சங்கீதத்திலும், சினிமாவிலும், சதுரங்க ஆட்டத்திலும் இருந்த உத்ஸாகம் படிப்பில் ஏற்படாததால் ஐந்தாவது பாரத்தோடு படிப்பை நிறுத்தி விட்டார். அவரது இரண்டுங் கெட்டான் பருவம் காரணமாக அவருக்கு சினிமாவில் நல்ல பாத்திரங்கள் கிடைக்கவில்லை. எனவே அவர் அகில இந்திய ரேடியோவில் சங்கீத இலாகாவில் சேர்ந்தார். ரேடியோ நிலையத்தில் மூன்று வருஷ காலம் உழைத்த பின், அவர் அதை விட்டு விலகி, ஜெமினியில்—"சந்திரலேகா" தயாராகி வந்த சமயத்தில்—ஒரு சங்கீத டைரெக்டராகச் சேர்ந்தார். ஆனல், ஆறு மாதத்திற்குப் பின் அவர் ஜெமினியிலிருந்து விலகி தமிழ் நாடு டாக்கீஸில் சேர்ந்தார். "துளஸிதாஸ்" படத்தின் சங்கீத டைரெக்ஷன் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இப் படம் முடிந்தபின் தமிழ் நாடு டாக்கீஸார் "இது நிஜமா!" என்ற படத்தைத் தயாரிக்க முற்பட்டனர். இந்தக் கதை பாலச்சந்தரால் எழுதப்பட்டது. இப் படத்தில் அவர் இரட்டை வேஷங்களில் திறம்பட நடித்திருக்கிருர்; சங்கீத டைரெக்ஷனை பூராவாக கவனித்திருப்பதோடு டைரெக்டருக்குத் துணையாகவும் இருந்திருக்கிருர். மேலும் படங்களை எடிட் செய்வதற்கும் ஓரளவு கற்றுக் கொண்டார்.

மேற்படி படத்தில் அவர் பெற்ற அநுபவம் அவருக்கு மிக தைரியத்தை உண்டு பண்ணியது. அடுத்தபடியாக அவர் "என் கணவர்" படத்தின் டைரெக்ஷன், சங்கீத டைரெக்ஷன், எடிட்டிங் ஆகிய பொறுப்புகளை தன்னந் தனியாகவே மேற்கொண்டார். அப் படத்தில் அவர் கதாநாயகனுகவும் நடித்திருக்கிருர்.

"இது நிஜமா!", "என் கணவர்" ஆகிய இரு படங்களிலும் பாலச்சந்தரின் நடிப்பு நன்கு அமைந்திருந்தது. அதோடு இதர பொறுப்புகளையும் அவர் சுமாராக முடித்திருந்தார். ஆனல் ஒரு படத்தின் பல பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளுவதற்குப் பதில் அவர் ஒன்றிரண்டு பொறுப்புகளை மட்டும் ஏற்றுக் கொண்டாரானல், அவரது திறமை பிரமாதமாய் வெளிப்படக் கூடும் என்று தோன்றவே செய்தது.



பாலச்சந்தரின் பெற்றோரும் உடன் பிறந்தவர்களும்

உட்கார்ந்திருப்பவர்கள் :—1. தாயார் செல்லம்மாள். 2. தங்கை கல்பகம். 3. தம்பி கோபால்சாமி. 4. தகப்பனார் சுந்தரம் ஐயர். 5. பாலச்சந்தர்.

நிற்பவர்கள் :—1. தமையன் மாஸ்டர் ராஜம். 2. தமக்கை ஜெயா. 3. தமக்கை சரஸ்வதி.

பாலசந்தர் கடைசியாக நடித்து வெளிவந்துள்ள படம் "தேவகி". இப்படம் சமீபத்தில் வெளிவந்து வெற்றிகரமாய் ஓடிக் கொண்டிருக்கிறது. தற்போது பாலச்சந்தர் "ராணி", "ராஜாம்பாள்" "ரத்தம்" ஆகிய மூன்று படங்களில் நடித்து வருகிறார். மாடர்ன் தியேட்டர் ஸாரும் அவரை ஒரு படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றனர். "ராஜாம்பாள்" படத்தின் சங்கீத டைரெக்ஷனையும், "ரத்தம்" படத்தின் டைரெக்ஷன், சங்கீத டைரெக்ஷன் இவற்றையும் கவனித்து வருகிறார். "ரத்தம்" கதை அவருடையதே என்பது கவனிக்கத் தக்கது.

பாலச்சந்தரைத் தவிர அவரது இதர குடும்பத்தினர் சினிமாவை மறந்து விட்டனர். "சிவகவி"யில் மட்டும் ராஜம், ஜெயா, இவர்களது தகப்பனார் ஆகிய மூவரும் மறுபடியும் சேர்ந்தாற் போல் நடித்தனர். அதுவே அவர்களது கடைசிப் படமாகும்.

பாலச்சந்தருடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரிகளும் இரண்டு சகோதரர்களும் ஆவர். அவரது தாயார் செல்லம்மாள் பிடில் வாசிப்பதிலும், தகப்பனார் வீணை வாசிப்பதிலும் தேர்ந்தவர்கள். அதே போல் அவர்களது குழந்தைகளும் சங்கீதத்தில் தேர்ந்தவர்களாயிருப்பது ஆச்சரியமல்ல. பாலச்சந்தர் அடிக்கடி ரேடியோவிலும், மேடை மீதும் வீணைக் கச்சேரிகள் செய்து வருகிறார். அவருடைய கடைசி சகோதரியான கல்பகமும் வீணையில் தேர்ந்தவர். அவரும் ரேடியோவில் அடிக்கடி கச்சேரிகள் செய்து வருகிறார். மாஜி நடிகர் ராஜமும், மாஜி நடிகை ஜெயாவும் தற்போது ரேடியோவில் மட்டும் அவ்வப்போது பாடி வருகின்றனர். பாலச்சந்தரின் சினிமாப் படப் பாட்டுகள்

இசைத் தட்டுகளில் வெளிவந்திருக்கின்றன.

பாலச்சந்தருக்கு தற்போது 25 வயதாகிறது. அவர் 1927ம் வருஷம் ஜனவரி மாதம் 18ந் தேதியன்று சென்னையில் பிறந்தவர். ஆனால் அவரது பூர்வீகம் நன்னிலம் தாலுகாவிலுள்ள ஸ்ரீவாஞ்சியம் என்ற கிராமம் ஆகும். அவரது தகப்பனார் சென்னைக்கு வந்து சட்டப் படிப்பை முடித்த பின், சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்லாமல் சென்னையிலேயே குடியேறி விட்டார்.

பாலச்சந்தருக்கு தமிழ், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மூன்று பாஷைகளும் நன்ருகத் தெரியும். சதுரங்கம் மட்டுமன்றி இதர ஆட்டங்களிலும் அவருக்கு இஷ்டம் அதிகம், கிரிக்கெட், பாட்மின்டன், டென்னிஸ், பிலியர்ட்ஸ் ஆகிய ஆட்டங்களை அவர் ஆடி வருகிருர். கேரம்ஸ் ஆடுவதிலோ அவர் ஒரு நிபுணராம். நீந்துவதிலும், குதிரை சவாரி செய்வதிலும், மோட்டார் ஓட்டுவதிலும் அவருக்கு நிறைய பயிற்சி உண்டு. "ராணி" படத்தில் அவர் கத்திச் சண்டையைக் கூட ஒரு கை பார்த்திருக்கிருராம்.

சிவந்த மேனியும், சினிமாவுக்கு ஏற்ற முகத் தோற்றமும், சுமார் ஐந்தரை அடி உயரமும் உடைய பாலச்சந்தரை, கதா நாயகர்கள் அதிக மில்லாமல் தவிக்கும் நம் தமிழ்ப் பட உலகம் தாராளமாய் பயன் படுத்திக் கொள்ளலாம். அவரிடம் சினிமாவுக்கு வேண்டிய சரக்கு நிறைய இருப்பதால் சீக்கிரத்தில் அவர் ஒரு புகழ் மிக்க நடிகராகவோ, கிராக்கி மிக்க டைரெக்டராகவோ ஆகிவிட முடியும் என்று நான் தைரியமாய்க் கூற முடியும்.

திரைப் படச் சங்கம்

சென்னை புரசைவாக்கத்தில் 'திரைப் படச் சங்கம்' என்ற ஒரு கழகத்தை ஆரம்பிக்க சில கலா ரஸிகர்கள் முயற்சி செய்து வருகின்றனர். சினிமாவில் ஈடு பட்டுள்ளவர்களிடம் நெருங்கிய தொடர்பு கொள்வது, சினிமா சம்பந்தப்பட்ட நூல்களைக் கொண்ட ஒரு புஸ்தகசாலை நிறுவுவது போன்ற பல நோக்கங்களுடன் ஆரம்பிக்கப் படுகிறதாம் இச் சங்கம்.

போன்: 55214 தந்தி: "விமானம்"

வாசவன் அளிக்கும் மகத்தான விருந்துகள்!

ரத்தக் குறி

வாசவன் எழுதியது

சிறுவர்களும், பெண்களும் இதைப் படிக்கக் கூடாதென்று தடை செய்யப்படுகிறது. பெரியவர்களுக்கு மட்டுமே விற்பனை.

நெருப்புப் பொறி பறக்கும் சூருவளி நாவல்

1—9—51ல் விற்பனைக்கு வரும்

சிறந்த விமரிசனத்திற்கு ஒரு பவுன் பரிசு!

அழகிய மூவர்ண அட்டை

விலை அணு 12 தான்

ஏஜெண்டுகள் முன்னதாகவே பதிவு செய்து கொண்டால்தான் கிடைக்கும்.

15—8—51ல் வருகிறது

பூகம்ப இரவு

கதாசிரியர் வேலவன் எழுதியது

விலை அணு 8

இப்பொழுது விற்பனையாகின்றது!

தாலி

எல்லார்வி எழுதியது

விலை அணு 8

சக்திவேல் பிரசுரம்

51-A, அரண்மனைக்காரத்தெரு, சென்னை-1

பிரம்மலோகம்

சம்சாரம்

அடுத்த மாத வெளியீடாக இருக்குமாம் ஜெமினியின் "சம்சாரம்". இதே படம் "சன்ஸார்" என்ற பெயரில் ஹிந்திப் படமாகவும் எஸ். எஸ். வாஸன் டைரெக்ஷனில் தயாராகி வருகிறது. தமிழ்ப் படத்தில் ராதாவும், புஷ்பவல்லியும் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர். மற்றும் டி. ஆர் ராமச்சந்திரன், வனஜா, கணேசன், நாகேந்திர ராவ் ஆகியோரும் நடிக்கின்றனர்.

அமரகவி

நாகூரின் "அமரகவி" அவரது டைரெக்ஷனில் நியூடோனில் சுறு சுறுப்பாகப் படமாகி வருகிறது. பாகவதர், ராஜகுமாரி, பி. எஸ். சரோஜா பிரதம பாகங்களில் நடிக்கும் படம் இது. ராஜகுமாரி முதன் முறையாக இப் படத்தில் ஆண் வேடத்தில் ஒரு ஊமையாக நடிக்கிறுர். சரோஜா–பாகவதர் தோன்றும் காட்சி ஒன்று சமீபத்தில் படமாகியது.

மணமகள்

என்னெஸ்கே பில்ம்ஸ் "மணமகள்" இம் மாதக் கடைசியில் திக்விஜயத்திற்குக் கிளம்பிவிடுவது நிச்சயமாம். சமீபத்தில் ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் இப் படத்திற்கென லலிதா–பத்மினியின் நடன நாடகம் ஒன்று படமாகியதாம். 'ஐம்பதும்—அறுபதும்' என்ற அந்த நடன நாடகம் படத்திலே ஒரு சிறந்த அம்சமாக இருக்குமாம். என். எஸ். கிருஷ்ணன் டைரெக்ஷனில் முற்றுப் பெற்றுள்ள இப் படத்தில் லலிதா, பாலய்யா, ஸஹஸ்ரநாமம், கிருஷ்ணன், மதுரம் முதலியோர் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர்.

ராஜாம்பாள்

சீக்கிரமே திரையிடப் படக்கூடிய படங்களில் அருணவின் "ராஜாம்பாள்" ஒன்ருக இருக்குமாம். சமீபத்தில் மாதுரி தேவி, மஞேஹர், டி. வி. சேதுராமன் சம்பந்தப்பட்ட காக்ஷி ஒன்று தயாரிக்கப்பட்டதாம். மற்றும் இப் படத்தில் பாலசந்தர், எம். வி. மணி, கே. சாரங்கபாணி, பி. கே. சரஸ்வதி ஆகியோரும் நடிக்கின்றனர்.

நடிகை

கைலாஸ் பிக்சர்ஸாரின் "நடிகை" இம் மாத இறுதியில் திரையிட்டு விடப்படுமாம். படப் பிடிப்பு முடிவடைந்து விட்டதாம். சமீபத்தில் இப் படத்தில் சேர்ப்பதற்கென 'நவீன சகுந்தலா' என்ற ஹாஸ்ய குட்டிப் படம் ரத்ன ஸ்டுடியோவில் தயாராகி முடிவடைந்தது. டி. வி. சேதுராமன் துஷ்யந்தனுகவும், கே.



பக்ஷிராஜா ஸ்டுடியோஸ 'காஞ்சன'' படப் பிடிப்பு சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டதை இப் படம் அறிவிக்கிறது. பக்தி சிரத்தையுடன் கைகூப்பி நிற்பவர் தான் டைரெக்டர்–முதலாளி ஸ்ரீராமுலு நாயுடு.

எஸ்.. அங்கமுத்து சகுந்தலையாகவும் நடிக்கும் இந்தக் காட்சி ரஸிகர்களுக்கு ஒரே தமாஷ் விருந்தாக இருக்குமாம்,

பஹார்

ஏவி. எம். "பஹார்" ஹிந்திப் படம் செப்டம்பர் மாதத்தில் வட நாட்டில் திரையிடப் பெறுமென்று தெரிகிறது. எம். வி. ராமனின் டைரெக்ஷனில் படப்பிடிப்பு முடிவடைந்து வருகிறது. சமீபத்தில் கதாநாயகனைப் பாராட்டும் கூட்டம் ஒன்று படமாக்கப்பட்டது. கரன்திவான், வைஜயந்திமாலா, ஓம் பிரகாஷ், பிரான், பேபி தபஸ்பம் ஆகியோர் படத்தில் நடிக்கின்றனர். தமிழ் நாட்டில் தயாராகியுள்ள ஹிந்திப் படங்களில் இது தலை சிறந்து விளங்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் டைரெக்டர் எம். வி. ராமன் மிகவும் சிரத்தையுடன் படத்தை டைரெக்ட் செய்து வருகிறாராம்.

சர்வாதிகாரி

செப்டம்பர் மாதம் 7ம் தேதி "சர்வாதிகாரி"யை வெளியே அனுப்பிவிடத் தீர்மானித்து, ஜரூராக வேலைகளை முடித்து வருகிறார்கள் மாடர்ன் தியேட்டர்ஸார். பிரம்மாண்டமான பல காட்சிகள் இப்படத்திற்கென போடப்பட்டுள்ளனவாம். இது வரை வந்த தம் படங்களையெல்லாம்விட மிகச் சிறந்ததாக இப்படம் இருக்க வேண்டுமென டி. ஆர். சுந்தரம் சிரத்தையுடன்படத்தை டைரெக்ட் செய்து வருகிறாராம். நாகய்யா, அஞ்சலிதேவி, எம். ஜி. ராமச்சந்திரன், நம்பியார், சரோஜா ஆகியோர் நடிக்கும் இப் படத்தின் கதை பிரபல ஆங்கிலப் படமான "டான் உவான்" கதையைத் தழுவியதாம்.

ஸ்த்ரீ ஸாகஸம்

சீக்கிரமே எதிர்பார்க்கக்கூடிய படங்களில் "ஸ்த்ரீ ஸாகஸம்" ஒன்றாக இருக்கும். ஏற்கெனவே "மந்திரி குமாரி", "திகம்பர சாமியார்"படங்களை விநியோகித்து வரும் பெல் பிக்சர்ஸார் இப்படத்தின் தமிழ் நாட்டின் பூரண உரிமையையும் வாங்கியிருக்கிறார்கள். அஞ்சலிதேவி, சூரியப்பிரபா, நாகேஸ்வர ராவ் இப்படி பல நக்ஷத்திரங்கள் நடிக்கும் படம் இது.

ரூ. 1,000 சவால்

உலகத்தின் எட்டாவது அதிசயம்!

மெஸ்மரிஸ வசீகர கைக்குட்டை

(நிகரற்ற தயாரிப்பு)

இந்தக் கைக்குட்டை மெஸ்மரிஸ சக்திமூலம் தயாரிக்கப்பட்டதாகும். இதை வைத்துக் கொள்பவருக்கு அபாரமான சக்தி ஏற்படும். யாரையும் வசீகரப் படுத்தலாம். காதலில் வெற்றியும், வழக்குகளில் ஜெயமும், மற்றும் பரீக்ஷை, தொழில், வியாபாரம், இவைகளில் லாபகரமான பலன்களும் ஏற்பட்டு நீங்கள் தனவந்தர்கள் ஆகலாம்.

நீங்கள் விரும்பும் ஒருவரிடம் இந்தக் கைக்குட்டையைக் காட்டினால் போதும்; அவர் வசீகரம் ஆகிவிடுவார். உங்கள் விருப்பம் எதுவானாலும் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் எதிரிகளாலும், கிரகக் கோளாறுகளாலும் ஏற்படும் ஆபத்துகளிலிருந்து உங்களைக் காப்பாற்றும். ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள். முதலிரவே அதன் அற்புத சக்தி உங்களுக்குத் தெரியும். விலை ரூ. 1—15—0.

வெளிநாடுகளுக்கு 5 ஷில்லிங் (பி. பி. ஓ.). தபாற் செலவு தனி.

தயாரிப்பவர்:

THE PROFESSOR:

NEW SCIENCE OF MESMERISM

(G. M.) JULLUNDUR CITY.

புஸ்தகப் பொழுது

சமீபத்தில், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காம் தமிழ் மகாநாடு சம்பந்தமாக ஒரு மலர் வெளியிடப் பெற்றுள்ளது. இம் மலரில் யாழ்ப்பாணம் சம்பந்தப்பட்ட பல்வேறு விஷயங்கள் பற்றிய அரிய கட்டுரைகள் இருக்கின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள சிறந்த தமிழ் விற்பன்னர்கள் தூய தமிழில் கட்டுரைகள் எழுதியிருக்கின்றனர். தமிழ் மொழிக்காகப் பாடுபட்ட ஈழத்துப் பெரியார்களின் படங்கள் பலவும் இடை இடையே இருக்கின்றன. ஐந்து ரூபாய் விலையுள்ள இம் மலர், 'க. நவரத்தினம், சாந்திநிகேதன், பி. ஏ. தம்பி லேன், யாழ்ப்பாணம் (ஸிலோன்)' என்ற விலாஸத்தில் கிடைக்கும்.

முகையூர் நீதிபதி

[ஆசிரியர்; கே. வி. கே; விலை: மூன்று ரூபாய்; கிடைக்குமிடம் : ஆசிரியர் நூற் பதிப்புக் கழகம், 53-56, பவழக்காரத் தெரு, சென்னை. 1.]

'ஹால் கேய்ன்' என்ற ஆங்கில ஆசிரியர் ஒருவரின் நவீனத்தை தழுவி எழுதப்பட்ட ருசிகரமான நாவல் இது. ஆசிரியர், கூடியவரை சம்பவங்களையும், கதாபாத்திரங்களையும் நமது பண்பாட்டுக்கு ஏற்றபடி அமைத்து எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியரின் நடை விறுவிறுப்புடன் இருக்கிறது. நீதிபதியின் வாழ்க்கையில் கடமைக்கும் காதலுக்கும் இடையே போராட்டம் நடக்கிறது. கடமையே முக்கியமெனக் கருதி சகலத்தையும் தியாகம் செய்கிறார் நீதிபதி. கடைசியில் காதல் வெற்றி பெறுகிறது. இதுதான் கதையின் முக்கிய சாராம்சம். படித்து ரஸிக்க வேண்டிய ஒரு நல்ல புத்தகம் இது.

பாடும் கீதம் கேட்குது

[ஆசிரியர் : என். எஸ். சிதம்பரம் ; விலை : அணா 12 ; கிடைக்குமிடம் : வண்டமிழ் நிலையம், 57, வடக்காண்டார் வீதி, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி]

ஆசிரியர் அவ்வப்பொழுது இயற்றிய இருபத்து ஐந்து தமிழ்க் கீர்த்தனைகளின் தொகுதியே இப் புத்தகம். ஆசிரியருக்கு தமிழ்மொழி மீதுள்ள அளவற்ற பற்றுதலை வெளியிடும் வகையில் அவைகள் இருக்கின்றன.

விடி வெள்ளி

வ. விஜயபாஸ்கரனை ஆசிரியராகக் கொண்டு வெளி வருகிறது இந்த வாரப் பத்திரிகை. கலை, இலக்கியம், அரசியல் இவைகளின் முற்போக்குக்காகப் பாடுபடுவது இப்பத்திரிகையின் நோக்கமாம். இரண்டணா விலையுள்ள இப்பத்திரிகை, சென்னை, செம்புதாஸ் தெருவிலிருந்து வெளி வருகிறது.

தெய்வ உணர்ச்சி

[ஆசிரியர் : சூரியானந்தர்: விலை : 3 அணா; கிடைக்குமிடம் : ஸ்ரீ இராமலிங்க நிலையம், பின்னலூர்.]

நாஸ்திகப் பிரசாரம் மலிந்து கிடக்கும் இந்த நாளில் மக்களிடையே தெய்வ நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய புத்தகங்கள் ஒரு நல்ல வரவேற்புத்தான். அத்துறையில் இப்புத்தகம் உதவக் கூடும்.

சினிமா நடிகர்

நீங்கள் சினிமாவில் நடித்து மாதம் ரூ. 100/- முதல் 1500 வரை சம்பாதிக்கவிரும்பினால் இன்றே எழுதுங்கள்.

உங்களுக்கு அதிகப் படிப்பு இல்லாவிட்டாலும்பாதகமில்லை

Director :

ANAND - FILM - SERVICE

Near Sitla temple (Sec. 201/14)

AMRITSAR.

நுனிப்புல்

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

விட்டார்கள். தன் பட வேலை நின்றுபோகாமலிருக்கவும், தன் தயாளகுணம் காரணமாகவும், அந்த ஸ்டுடியோ முதலாளி ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் பணம் கட்டி நடிகரை தப்புவித்திருக்கிறார். இந்த வகையில் அந்த நடிகருக்குப் பேசிய தொகையைப் போல மூன்று பங்கு பணம் முதலாளி கொடுத்திருக்கிறார். ஆனால், ஒரு சந்தோஷ விஷயம்! அந்தப் புராணப் படம் முதலாளிக்கு அமோகமான வசூலை அளித்தது தான்.

*   *   *

இன்றையக் குட்டி நக்ஷத்திரத்தின் தாயும், (மாஜி) பிரபல நக்ஷத்திரமுமான ஒருவரும் இந்த அவஸ்தைக்கு ஆளாகி இருக்கிறார். வழக்குகளுக்கு என்று தமக்கு ஏற்பட்ட எக்கச்சக்கமான செலவுகளுக்காக அவர் தம் காரை ஒரு மார்வாரியிடம் அடமானம் வைத்து பணம் கடன் வாங்கினார். குறிப்பிட்ட காலத்தில் பணத்தைத் திருப்பித் தர முடியாமல் மார்வாரியை அலைக்கழித்தார். ஆனால், அந்த மார்வாரி ஒரு விடாக்கண்டன். விடாப்பிடியாக தனக்குச் சேரவேண்டிய தொகைக்கு நடிகையிடமிருந்து ஒரு 'செக்' வாங்கிக்கொண்டான். பாங்கியில் நடிகையின் கணக்கில் அவர் கொடுத்த 'செக்'குக்குக் கொஞ்சம் குறைவான தொகை இருப்பு இருந்தது. ஆகவே 'செக்'குக்குப் பணம் கிடைக்காது, மார்வாரி ஏமாறுமார் என்ற தைரியத்தில்தான் நடிகை 'செக்' கொடுத்தார். ஆனால், அந்த மார்வாரியோ பலேப் பேர்வழி? தனக்கு அளிக்கப்பட்ட 'செக்'கில் கண்டுள்ள தொகைக்கும், நடிகையின் கணக்கில் உள்ள தொகைக்கும் உள்ள வித்தியாசம் ரொம்ப ரொம்ப சொல்பத் தொகையாக இருப்பதை அறிந்துகொண்டார். தம் கையிலிருந்து அந்த அச்சிறு தொகையை நடிகையின் கணக்கில் கட்டி ஈடுகட்டிவிட்டு, 'செக்'குக்குப் பணம் பெற்றுக் கொண்டார் அவர்!



இனாம்! இனாம்!! இனாம்!!!

எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும் பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றின் விலை

ரூ. 1—15—0.

3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும், மோதிரமும் (நியூகோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும் :

SHINING PHARMACY (G.M) Jullundur City.

குண்டூசி டைரி

ஜூலை. 1951

1. நியூ ஸ்டார் நாடக கோஷ்டியினர் பெண்களே நடிக்கும் "நண்பன்" என்ற நாடக ஆரம்ப பூஜையை நடத்தினர்கள்.

7. செய்தி இலாகா மந்திரி திவாகருக்கு தென்னிந்திய பிலிம் சேம்பர் ஒரு வரவேற்பு அளித்தது.

8. திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் கிளப் அங்கத்தினர் "ஜீவபூமி" நாடகத்தை நடித்தார்கள்.

9. ஜூபிடர்—சங்கீதா பிக்சர்ஸ் கூட்டுத் தயாரிப்பான "ஜமீன்தார்" படத்தின் ஆரம்ப விழா நடந்தது.

11. ஹார்மோனிஸ்ட் கே. எஸ். தேவுடு அய்யர் மதுரையில் காலமானார்.

15. ஒய். எம். சாமுவல் சங்கீதக் கழகத்தினரின் கதம்ப சங்கீதக் கச்சேரி நடைபெற்றது.

பிரபாத் டாக்கிஸின் பதினொன்றாவது வருட விழாக் கொண்டாட்டம் நடைபெற்றது.

ராஜாஜி கலைக் கழகத்தாரின் "லக்ஷியவாதி" நாடகம் நடைபெற்றது.

18. கர்நாடக சங்கீதக் கழகம் ஆரம்பிப்பது குறித்து விவாதிக்க நான்கு ராஜ்ய மந்திரிகளின் மகாநாடு ஹைதராபாத்தில் நடைபெற்றது.

21. எம். எஸ். பிக்சர்ஸ் வெளியீடான "மோஹன சுந்தரம்" தமிழ் நாட்டில் திரையிடப் பட்டது.

22. தூண்டுகோல் வளர்ச்சி நிதிக்காக "பொன்னி" என்ற நாடகம் நடைபெற்றது.

27. "நவலோகம்" மலையாளப் படம் சென்னை சாகரில் திரையிடப் பட்டது.

28. சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

31. திருக்கோகர்ணம் கலா ரஞ்சனியாரின் முதல் நாடகமான "தியாகச் சின்னம்" அரங்கேறியது.

13453

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்)

Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL / 688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுநீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)

Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறுநீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (த. சி. தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, (B) MADRAS-1.

பிராஞ்ச்: 134 SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட் NEW COLOMBO MEDICAL STORES, 82. MAIN ST., கொழும்பு-11

Printed by S. SRIRAMAN at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. GOPAL (Gundoosi), at 25, Godown Street, Madras-1.

ரூ. 1000 ரொக்க இனும்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லாவிதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாய ஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணுயிருந்தாலும், பெண்ணுயிருந்தாலும் தக்ஷணமே வசியமாகி விடுவார். அன்னவர் எவ்வளவு கல்லைப் போன்ற மனம் உடையவராய் இருந்தாலும், ஏழு சமுத்திரங்களுக்கு அப்பால் இருந்தாலும், எல்லாத் தடைகளையும் கடந்து வந்து உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதினுல் மலட்டு ஸ்திரீக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடுபேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும், லாட்டரி, ஆட்டப்பந்தயம், சூதாட்டம், வழக்கு இவற்றில் ஜெயம் உண்டாகி வெற்றி பெறுவீர்கள், பரீக்ஷையில் தேறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டாகும்.

துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். தரித்திரம் விலகும். நல்லதிர்ஷ்டம் உண்டாகும். ஜீவிய காலம் சுகமாகவும் சந்தோஷமாகவும் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3-0-0. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ 3-15-0. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும், இம் மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படிப் பலன் இல்லைபோனுல் இரட்டிப்பு சார்ஜ் வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும்! ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

விவரங்களுக்கு எழுதவும்:

Principal,

The Bengal Mesmerism House (G.M.)

JULLUNDUR CITY.

எனெஸ்கே பிலிம்ஸாரின்
மணமகள்
டைரக்ஷன் N.S.கிருஷ்ணன்
BALU BROS
விவரங்களுக்கு :- எனெஸ்கே பிலிம்ஸ், சென்னை.17.